விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 168 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 22 வியாழக்கிழமை (05.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தோண்டத் தோண்ட மனித எச்சங்கள் நேற்றும்
# ஆறு மண்டையோடுகள்
# செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணியில் தோண்டும் இடமெல்லாம் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நேற்றைய அகழ்வின்போதிலும் 6 மண்டையோட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு 650 மில்லியன் நேரடி முதலீடு

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கைக்கு 650 மில்லியன் டொலர் அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி

16ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசு கட்சியின் வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு எதிரான

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனித புதைகுழி விசாரணை முன்னெடுக்கப்படும்

### தேவையான நிதி ஒதுக்கப்படும் பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன



(கொழும்பு)

செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுஅமைச்

15ஆம் பக்கம் பார்க்க

## பாரிய மனித புதைகுழியாக செம்மணியை பிரகடனப்படுத்துக

### அகழ்வுக்கான நிதியைத் திரட்டித்தர தயார் சபையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

செம்மணி புதைகுழி அகழ்வுப் பணிக்கு போதிய நிதி இல்லாமல் அந்த நடவடிக்கைகளை நிறுத்தப் போகின்றனர். அந்தப் புதைகுழியைப் பாரிய மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த வேண்டும். அதற்காக நிதியை ஒதுக்க வேண்

15ஆம் பக்கம் பார்க்க



### வவுனியா காத்தார் சின்னக்குளத்தில்
## இரத்தக்கறைகளுடன் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா காத்தார் சின்னக்குளத்தில் உள்ள வீடொன்றிலிருந்து இரத்தக்கறைகளுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை மீட்டுள்ளனர்.

வீடொன்றில் இளைஞன் ஒருவரின் சடலம் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார்

15ஆம் பக்கம் பார்க்க

## மனித புதைகுழி அகழ்வை சர்வதேச மேற்பார்வையில் முன்னெடுக்குக

### உறவுகள் செம்மணியில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் சர்வதேச மேற்பார்வையுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணம் செம்மணியில் இன்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் செம்மணிப்

15ஆம் பக்கம் பார்க்க

## பேச்சுக்கு வாருங்கள்

### இலங்கைத் தமிழரசுக் கட்சி ஈ.பி.டி.பியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க கூட்டணியமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த வருமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடம் (ஈ.பி.டி.பி) கோரிக்கை விடுத்

15ஆம் பக்கம் பார்க்க

## 2026ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பை ஆரம்பிக்க நடவடிக்கை - பிரதமர்



(கொழும்பு)

நவீன உலகத்துடன் இணையக்கூடியவாறு எதிர்காலச் சந்ததியினரை உருவாக்குவதற்காக சகல பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு 2026ஆம் ஆண்டில் கல்வி மறுசீரமைப்பை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது பயன்படுத்தப்படும் பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக தற்காலத்திற்கு ஏற்றவாறு மிகவும் அபிவிருத்தியடைந்த நவீனமுறைகளை அறிமுகப்

16ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடத்தின் முதல் 5 மாதங்களில்
# வாகன இறக்குமதி மூலம் ரூ. 136 பில்லியன் வருமானம்

(கொழும்பு)

வாகன இறக்குமதியின் பின் இந்த வருடம் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் வாகன இறக்குமதி மூலம் 136 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக திறைசேரி அதிகாரிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் 450 பில்லியன் ரூபா வருமானத்தை இந்த வருட இறுதிக்குள் அடைய முடியுமெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கப் பிரிவில் இருந்து சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதன் போது தெரியவந்துள்ளது.(ம-7)

# சம்பியனான பெங்களூரு; பாராட்டு விழாவில் கூட்ட நெரிசல்
## 11 பேர் உயிரிழப்பு



(பெங்களூரு)

18 ஆண்டுகளுக்குப் பிறகு ஆர்.சி.பி ஐ.பி.எல் கோப்பையை வென்றதால் பெங்களூருவில் நடைபெற்ற வெறித்தனமான கொண்டாட்டத்தால் இரு இடங்களில் ஏற்பட்ட கடும் சன நெரிசலில் சிக்கி அண்ணளவாக 11 பேர் மரணித்துள்ளனர்.

அணியைப் பாராட்டுவதற்காக சின்னசாமி மைதானம் அருகே கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம் (KSCA) ஒழுங்கு செய்த நிகழ்வில் கூட்டம் கூடியதைத் தொடர்ந்து குழப்பம் தொடங்கியது.

கூட்ட நெரிசலில் சிக்கி சுமார் 11 பேர் உயிரிழந்தனர். (ம-7)

## வெள்ளவத்தையில் துயரம்
# ஐந்து மாடிக் கட்டடத்திலிருந்து தவறிவிழுந்து ஒருவர் பலி

மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த ஒருவர் வெள்ளவத்தை இராமகிருஷ்ணா பிளே ஸில் உள்ள 5 மாடி கட்டடத்திலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாடியில் உள்ள நடைபாதைக்கு அருகில் நேற்று (04) காலை மரக்கைப்பிடியால் செய்யப்பட்ட சாதனத்தைப் பயன்படுத்தி யன்னல் அடைப்புகளை சுத்தம் செய்யும் போது அவர் கீழே விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசையா தவராசா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும்இவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ரணிலுக்கு எதிரான
# மனுக்களை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கலால் சட்டத்தை மீறி மதுபான உரிமங்களை வழங்கியதன் மூலம் அடிப்படை மனித உரிமைகளை மீறியதாகத் தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் (03) அனுமதி அளித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அது நடைபெற்ற திகதி வரையிலும், அதற்கு முன்னைய ஆண்டிலும் வழங்கப்பட்ட மதுபான உரிமங்கள் தொடர்பான தகவல்களை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு தற்போதைய கலால் பணிப்பாளர் நாயகத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு ஜூலை (26) அன்று ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதிக்கும் செப்ரெம்பர் (21) அன்று ஜனாதிபதித் தேர்தல் திகதிக்கும் இடையில் பிரதிவாதிகள் சட்டத்தை மீறி புதிய மதுபான உரிமத்தை வழங்கியதாகக் குற்றம் சாட்டினார்.

அரசியல்வாதிகளின் நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், முன்னாள் அமைச்சர் சாந்த பண்டாரவின் 19 வயது மகனுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் மதுபான உரிமம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். (ம-7)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 07.05.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த விராங்கொடை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குலவிளக்கு

### அமரர் கமலாம்பிகை தவராஜசிங்கம் (கமலா)

அவர்களின் 31 ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 03.06.2025 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 06.06.2025 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு பின்வரும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் இந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குல விளக்கின் மறைவுச் செய்தி அறிந்து இல்லம் நாடி வந்து ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

விராங்கொடை,
தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
(வீரசிங்கம் தவராஜசிங்கம்)
077 1187 385

(1184)


# உங்கள் கனவு வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கான முதல்படி.

ஒரு தொழிலினை தொடங்குவதற்கான Ideaவினை வைத்துள்ளீர்களா?

அல்லது

ஏற்கனவே நடத்திக்கொண்டு இருக்கும் உங்கள் தொழிலினை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல நினைக்கிறீர்களா?


அல்லது

உங்களின் வித்தியாசமான வியாபாரச் சிந்தனைகளை ஒரு startup ஆக அதாவது ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கான வாய்ப்பு.

Yarl Geek Challenge Senior இன் இந்த வருடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பதற்கும் மேலதிக தகவல்களுக்கும்

www.yarlithub.org/ygc-senior



இதுவரை 75க்கும் மேற்பட்ட வியாபார முயற்சிகளுக்கு உறுதுணையாக நின்ற களம்.
உங்கள் வியாபார கனவுகளை நியமாக்க இன்றே விண்ணப்பியுங்கள்.

(4466)

மேலதிக தகவல்களுக்கு

+94 76 76 73158


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி நிதியம்;
# வடக்கில் பயனாளிகளை அதிகரிக்க நடவடிக்கை

**(கொழும்பு) பிரதேச செயலகங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதன் மூலம், அதில் கோரப்படும் மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.**

அதே நேரத்தில், புதிய கணினி அடிப்படையிலான அறிவு குறித்து பிரதேச செயலகங்களின் உரிய விடயத்துடன் தொடர்புடைய ஊழியர்களுக்கு தெளிவூட்டுவதும் பயிற்சி அளிப்பதும் அவசியமாகியுள்ளது.

அதன் ஒரு அங்கமாக, வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு. மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் ஜனாதிபதி நிதியம் தொடர்பாக செயலாற்றும் அதிகாரிகளுக்கு வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பயிற்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் மூலம், வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி நிதியின் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயனாளிகளுக்கு உயர்தர சேவையை வழங்கவும், நவீனமயமாக்கப்பட்ட ஒன்லைன் அமைப்புகளை அறிமுகப்படுத்தவும், மேலும் சேவைகளை விரைவாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பை மையமாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட அளவிலானவர்களுக்கு மட்டும் நன்மைகளை வழங்கிய ஜனாதிபதி நிதியத்தை, நாடு முழுவதும் வாழும் மக்களுக்கு நன்மைகளை வழங்கும் மக்கள் நிதியமாக செயற்படுத்துவதே தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான பணிக்குழுவின் முதன்மையான நோக்கமாகும்.

அந்த நோக்கத்தை அடைய, எதிர்காலத்தில் இதுபோன்ற பயிற்சித் திட்டங்கள் ஏனைய மாகாணங்களிலும் செயற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## காசா நிலைமை குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை!

(கொழும்பு)

காசாவில் தற்போதைய மனிதாபிமான நிலைமை குறித்து இலங்கை அரசாங்கம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் விதிகள் மற்றும் தொடர்புடைய ஐ.நா தீர்மானங்களின்படி, பாலஸ்தீன மக்களின் அரச உரிமைக்கான இலங்கையின் அசைக்க முடியாத ஆதரவை அரசாங்கத்தின் சார்பாக வெளிவிவகார வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கான பாலஸ்தீன தூதர் இஹாப் கலீல், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை அமைச்சக வளாகத்தில் சந்தித்தபோது இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. (நி-8)

## இளைஞர்கள் மத்தியில் அதிகரிக்கும் மாரடைப்பு




(கொழும்பு)

இலங்கை மற்றும் பிற தெற்காசிய நாடுகளில், இளைஞர்கள் மத்தியில், மாரடைப்பு அதிகரித்து வருகிறது என இருதயநோய் நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்தார். ஒரு காலத்தில் 40 வயதுக்குட்பட்டவர்களில் அரிதாக இருந்த மாரடைப்பு, இப்போது மிகவும் பொதுவானதாகிவிட்டது.

ஒவ்வொரு மாதமும், 20 மற்றும் 30 வயதுகளில் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களை தாம் சந்திப்பதாக கூறும் அவர், அதில் பலர் உடல் பருமன் அல்லது குடும்ப வரலாறு போன்ற பாரம்பரிய ஆபத்து காரணிகள் இல்லாமல், மாரடைப்புக்கு உள்ளாகியுள்ளதை காணமுடிகிறது என்று குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## பணிப்பகிஷ்கரிப்பில் குதிக்கும் மருத்துவ சங்கத்தினர்



(கொழும்பு)

சுகாதாரத்துறை தொடர்பான பிரச்சினைகள் உட்பட பல தீர்க்கப்படாத கோரிக்கைகளை முன்வைத்து, நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் சங்கத்தினர் இன்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த விடயங்களைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட விவாதங்களில் ஈடுபடுவதை சுகாதார அமைச்சர் தொடர்ந்து தவிர்த்து வருவதாக நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

துணை மருத்துவ சேவை பணியாளர்களின் பதவி உயர்வு தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்த உறுதியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதன்படி, முறையான கலந்துரையாடல் நடத்தப்பட்டு, அவர்களின் பிரச்சினைகள் நிவர்த்தி செய்ய உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், வேலை நிறுத்தத்தை கைவிடப் போவதில்லை என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-8)

## புலமைப்பரிசில் பரீட்சை ரத்து; இதுவரை முடிவில்லை
### நிலைப்பாட்டைத் தெரிவித்த பிரதமர்



(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்வது குறித்து இப்போதைக்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் சம்பியனானது யாழ்.ஜொனியன்ஸ்



கே.சீ.சீ.சீ கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. யாழ்.ஜொனியன்ஸ் அணி, பற்றீசியன்ஸ் அணியை 28 ஓட்டங்களால் வெற்றி பெற்று 7 ஆவது தடவையாகவும் வெற்றிக் கிண்ணத்தை தம்வசப்படுத்தியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணியினா் களத்தடுப்பை மேற்கொண்டனா்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 39.4 ஓவா்களில் சகல இலக்குகளையும் இழந்து 283 ஓட்டங்களை பெற்றனா். துடுப்பாட்டத்தில் சச்சின் கணபதி-38, சௌமியன்-16, ரட்ணம்-22, அஸ்நாத்-24, சண்சஜன்-90, கிஸாந்துஜன்-28, கின்துஸன்-31 ஓட்டங்களைப் பெற்றனா்.

பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் அணி சாா்பில் நதீஸன் 8 ஓவா்களில் 44 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் சண்ஜீவன் 7.1 ஓவா்களில் 33 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும். பியரிக்2.3 ஓவா்களில் 18 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும் கைப்பற்றினா்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 38.2 ஓவா்களில் சகல இலக்குகளையும் இழந்து 255 ஓட்டங்களை பெற்றனா்.

பியறிக்-36 , டிலக்ஸன்-34. நிலோஜன்-31, லொயிட்-27, சேர்ச்சில்-56, றதீஸன்-21, ஓட்டங்களை பெற்றனா்.

பந்து வீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணி சாா்பாக யதுாஸன் 8 ஓவா்களில் 68 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும், அஸ்நாத் 8 ஓவா்களில் 32 ஓட்டங் களை கொடுத்து 03 இலக்குகளையும் கைப்பற்றினா்.

போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசிலை பற்றீசியன்ஸ் அணி சாா்ந்த சேர்ச்சிலும், சிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசிலை யாழ். ஜொனியன்ஸ் அணி சாா்ந்த கமல்ராசும் சிறந்த களத் தடுப்பாளருக்கான போட்டியின் சிறந்த வீரருக்கான பரிசிலையும்,தொடரின் தொடா் நாயகனுக்கான பரிசிலையும் யாழ். ஜொனியன்ஸ் அணியை சாா்நத அணித் தலைவா் சண்சஜனும் பெற்றுக் கொண்டனா்.



சிறந்த துடுப்பாட்ட வீரர்
சேர்ச்சில் (பற்றீசியன்ஸ்)



சிறந்த களவீரர்
டனீசியஸ் (பற்றிக்ஸ்)




சிறந்த பந்து வீச்சாளர்
கபில்ராஜ்
(யாழ்.ஜொனியன்ஸ்)



சிறந்த தொடர் ஆட்ட நாயகன்
சன்சயன் (Capt) யாழ்.ஜோன்சன்

# 18 ஆண்டுகள் காத்திருக்க வைத்து விட்டாயே!

## ஐ.பி.எல் வெற்றி குறித்து கோலி உருக்கம்





18 ஆவது ஐ.பி.எல். தொடரில் இறுதிப் போட்டிகள் அகமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ் இறுதிப்போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

இப் போட்டியில் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆர்சிபி இறுதிப் போட்டியை வென்று முதல் முறையாக கோப்பையை கைப்பற்றியது. இந்த வெற்றியின் மூலம் அந்த அணியின் நீண்ட கால ஏக்கம் தீர்ந்துள்ளது.

இந்நிலையில், ஐ.பி.எல் கோப்பையை வென்ற புகைப்படங்களை விராட் கோலி தனது இன்ஸ்டா கிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் சாம்பியன் என்று ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்ட சிவப்பு நிற டிசர்ட் அணிந்து, கோப்பையை பிடித்தபடி விராட் கோலி இருக்கும் புகைப்படம் இணையத்தில் வைரலாகி யுள்ளது.

அந்த இன்ஸ்டா பதிவில் "ஐ.பி.எல் கோப்பையே! உன்னை கையில் ஏந்திக் கொண்டாட, என்னை 18 ஆண்டுகள் காத்திருக்க வைத்துவிட்டாயே..! இந்த சீசனை வாழ்நாளில் மறக்கவே மாட்டேன். பல வருட மன வேதனைகள், ஏமாற்றங்களுக்குப் பிறகு இந்த வெற்றி கிடைத்துள்ளது. இது கடினமான நேரங்களில் என்னோடு பயணித்த ஆர்.சி.பி ரசிகர்களுக்கானது" என்று பதிவிட்டுள்ளார். (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக மாணவர்களை இணைப்பதில் மோசடிகள்!

## எச்சரிக்கை விடுக்கும் கல்வி அமைச்சு

**(கொழும்பு)**

**பாடசாலைகளுக்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் ஏற்படும் மோசடிகள் தொடர்பில் கல்வியமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு எதிராக மாணவர்களை இணைத்துக் கொள்ளும் அதிகாரிகளுக்கு எதிராக, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி பிரதி அமைச்சர் மதுர சேனவிரத்ன எச்சரித்துள்ளார்.

பாடசாலைகளில் புதிதாக மாணவர்களைச் சேர்ப்பதில் சில இடங்களில் முறைகேடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதில் முறைகேடுகள் இடம்பெற்றால் கல்வி அமைச்சின் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யுமாறு பிரதி அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)


## வேலை வாய்ப்பு

எங்கள் நிறுவனம் விரிவடையும் பணியாளர்களைத் தேடுகிறது! கீழ் கண்ட பணியிடங்களுக்கு திறமை மிக்க நபர்கள் தேவை:

- **டிரைவர் (Driver)**
  செல்லுபடியாகும் டிரைவிங் லைசன்ஸ் அவசியம்
  அனுபவம் உள்ளவர்கள் விருப்பம்
  நல்ல தொடர்பாடல் திறன்
- **உதவி கணக்காளர் (Assistant Accountant)**
  கணக்கியல் துறையில் தகுதியும் அனுபவமும்
  சுருக்கமான மற்றும் துல்லியமான பணிபுரிதல் திறன்

பணியிடம்: **No 462, Main Street, Jaffna**
பணிநேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை
சம்பளம்: அனுபவம் மற்றும் தகுதியை பொறுத்து சிறந்த சம்பள வசதி
தகுதியானவர்கள் தங்கள் சுய விவரத்தை கீழ்கண்ட மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:
**Sunmarket12@gmail.com**
மேலும் தகவலுக்கு: 076 139 1993
**Sun Marketing (Pvt) Ltd.**
உங்களது தொழில்முனைவுக்கு நாங்கள் துணை நிற்கிறோம்!
(1196)


## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- அரிகரபுத்திரன் மதிவதனக்குருக்கள்
விண்ணப்பதாரர் பெயர் :-அரிகரபுத்திரன் மதிவதனக்குருக்கள்
முகவரி :- அளவெட்டி வடக்கு, பன்னாலை

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 11, நகுலேஸ்வரம் கருகம்பனை வீதியல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 22.05.2011 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திரு.ப.இராசகுரு அவர்கள் முகதாவில் இலக்கம் 8090 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.இராமச்சந்திரன் அவர்களால் அளந்து வரைந்த 3932 ஆம் இலக்க 07.05.2011 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு -5 ஆகக் காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "அரசடி" நிலப்பரப்பு ஏழும் குளி ஆறு தசம் நாற்பத்திரண்டு (07 குளி 00.42) ஆகும்.

கிழக்கு :- 4 ஆம் துண்டு பாதைக்காணி
வடக்கு:- 1 ஆம் துண்டு காணி
மேற்கு :- செல்லத்துரை கணேசாவுக்குரிய காணியும் றோட்டும்
தெற்கு :-றோட்டு

மேற்குறித்த ஆதனத்தை **அரிகரபுத்திரன் மதிவதனக்குருக்கள்** என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறுவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சிதம்பரநாதன் ரங்கதாஸ்,செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**
(4464)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
11
06
1947



விண்ணில்
03
06
2025

அளவெட்டி வடக்கு, அளவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.திருமதி.தம்பிராசா கனகம்மா**

எமது சங்கத்தின் 132 ஆம் இலக்க தஞ்சிட்டி கிளை அங்கத்தவராகிய **திரு.த.ஸ்ரீக்குமார்** அவர்களின் பாசமிகு தாயார் திருமதி.**தம்பிராசா–கனகம்மா** அவர்கள் 03.06.2025 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(த-3115)

பிரிவால் துயருறும்- அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், சுன்னாகம்.ப.தெ.வ.அ.கூ.சங்கம். (மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)

## இராசிபலன்

05.06.2025
வைகாசி 22, வியாழக்கிழமை
தசமி பின்னிரவு 4.42 மணிவரை

உத்தரம் காலை 6.41 மணிவரை
சுப நேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

பாபகர தசமி
சந்திராஷ்டமம் சதயம்

**வளவன்**




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்,கௌரவமானநாள்.




பிள்ளைகளின் நீண்டநாளைய தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்,பூர்விக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




பொது காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆதாயம் காணவேண்டிய நாள், வியாபாரத்தை விரிவுப்படுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், புதிய பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.




ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது,கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ளவேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.




ஒரு சில வேளைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம்,தேவையற்ற மனக்குழப்பங்களை தவிர்பது நல்லது, சயனசுகக்குறைவான நாள்,ரோக பயமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்தினர் வருகையுண்டு,பொது வாழ்வில் புகழ் கூடும்.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்,வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு.




ஏட்டிக்கு போட்டியாக செயற்படுபவர்கள் மனம்மாறுவர். மருத்துவ செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும்,நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்,பயணங்களால் பலனுண்டு




மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது,கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்,விரயங்கள் கூடும் நாள், பிரயாண பயமுண்டு.




ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள் ,மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம் ,வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**அழகு மனிதனுக்கு இறைவன் அளித்துள்ள மகத்தான பரிசு.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டத்திற்கு முரணாக மக்களின் காணிகள் திருட்டு

## ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

வனவளத் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்வீக குடியிருப்பு மற்றும், விவசாயக் காணிகளை அடாவடித்தனமாக அபகரித்துவிட்டு, அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு மறுப்பதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்தசில நாட்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நான் மேற்கொண்ட களவிஜயத்தின் போது, அரசாங்கத்தின் சில திணைக்களங்கள் நூதனமான முறையில் தமிழ் மக்களின் காணிகளை திருடிவருவதை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரணாக பொதுமக்களின் காணிகளைத் திருடி வருகின்றார்கள்.

பொதுமக்களின் குடியிருப்புக்காணிகளையும், அவர்களின் வயல் நிலங்களையும், வர்த்தமானி அறிவித்தல் மூலம் சட்டத்திற்கு முரணான வகையில் வன ஒதுக்குப் பிரதேசங்களாக, தொல்லியல் ஒதுக்குப் பிரதேசங்களாக ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்கள்.

இதனால் இங்குள்ள மக்கள் தமது பூர்வீக குடியிருப்புக்களில் குடியிருக்க முடியாமல், வயல் நிலங்களில் பயிரிட முடியாமல் துரத்தியடிக்கப்படுகின்றார்கள்.

இதனால் அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய அன்றாட உணவுத் தேவை, அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி என்பன மறுக்கப்படுகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேச



செயலாளர் பிரவின் அம்பகாமம் பகுதியில் விமானப் படைத்தளம் அமைப்பதற்கு, ஒதுக்கப்பட்ட வனப்பகுதியிலிருந்து 8000ஏக்கர் வனப்பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

வனவளத்திணைக்களத்தின் அனுமதி இன்றி, குறித்த சட்ட ஏற்பாடுகள் எவற்றையும் பின்பற்றாது, இந்த அடர்வனப் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், இங்குள்ள பெறுமதியான மரங்கள் இரகசியமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

எனவே இதுதொடர்பில் வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (8-299)

# பல்கலைகழக நிர்வாக சேவைப் பதவிகள்; போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நிலவும் உதவிச் செயலாளர், உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் /உதவி நிதிப் பொறுப்பாளர்/உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 15/2017 சுற்று திருபத்துக்கு அமைவாக உதவிச்செயலாளர், உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் உதவி நிதிப் பொறுப்பாளர், உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடை முறைகளுக்கேற்ப 60 சதவிகித வெற்றிடங்கள் வெளிவாரி விண்ணப்ப தாரிகளிடமிருந்தும், 40 சதவிகித வெற்றிடங்கள் உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்தும் நிரப்பப்பட வுள்ளன.

விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் அடங்கிய விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் அனைத்தும் நிகழ் நிலை மூலமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 20 ஆம் திகதி ஆகும். தெரிவுக்கான பரீட்சைகள் அனைத்தும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் நடத்தப்படவுள்ளன. (நி-8)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் ஏற்பாட்டில் பூநகரி நாச்சிக்குடா கடற்கரை சுத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது. (படம்:- தேவானந்தன்)


கண்ணீர் அஞ்சலி



தோற்றம்–1950.05.10 மறைவு–2025.06.03

துன்னாலையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்.திரு.தாமோதரம்பிள்ளை
கணபதிப்பிள்ளை

யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.கணபதிப்பிள்ளை-செந்தூரன் அவர்களின் அன்பு தந்தையார் திரு.தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் 03.06.2025 ஆம் திகதி மரணமடைந்துள்ளார்.அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள்,பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம். (சி-3116)

பிரிவால் துயருறும்– அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம் (மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)


# பாடசாலைகளின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு கல்வி அமைச்சு அனுமதி

## காதர் மஸ்தான் எம்.பி

(வவுனியா)


வன்னி மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த 11 பாட சாலைகளின் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நேற்று தெரிவித்துள்ளார்.

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கல்வி அமைச்சு தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போதே குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்ற செயலணி ஊடாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த வன்னி மாவட்டத்தில் உள்ள 11 பாடசாலைகளின் மீள் நிர்மானப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சரிடம் நான் கோரிக்கையை முன் வைத்திருந்தேன். இதன்போது எனது கோரிக்கையை ஏற்று அதற்கான நிதி ஏற்பாடுகளை செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதன் மூலம் வன்னி மாவட்டத்தில் 11 பாடசாலைகளின் கட்டுமானப் பணிகள் மீள இடம்பெற்று மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் எனத் தெரிவித்தார். (8-250)







யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய விரிவுரையாளர் அம்பலவாணர் லோகநாதன் அவர்களின் மணிவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை விவசாயிகளை விடுவிக்கக்கோரி

# யாழ்.பல்கலை முன்பாக கவனயீர்ப்பு

(அராலி) ..........................

**குருந்தூர் மலையில் கைது செய்யப்பட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் "மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, தொல்லியல் திணைக்களம் அரசின் கைக்கூலியா, இந்த மண் எங்களின் சொந்தமண், பண்பாட்டு இனப்படுகொலையை நிறுத்து, குருந்தூர் மலையில் கைது செய்யப்பட்ட விவசாயிகளை விடுதலை செய், வடக்கு கிழக்கு தமிழர் தாயகம், இனப்படுகொலை இராணுவமே வெளியேறு, தமிழரின் நிலம் தமிழருக்கே சொந்தம், ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை" என கோஷமிட்டு பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-8-104)

# தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 31 ஆவது ஆண்டின் 28 ஆவது மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி(2025) எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சண்டிலிப்பாய் உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.இச் சுற்றின் இறுதிப் போட்டியில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியினர் மோதவுள்ளனர்.

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் இ. ரவிக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வட மாகாண பொலிஸ்மா அதிபர் (காங்கேசன் துறை) தனபால், தெல்லிப்பழை வலி வடக்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் க.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

**கரணவாய் செல்வாபுரம் வீர பத்திரர் ஆலய புதிய தேர் வெள்ளோட்ட நிகழ்வு நேற்று புதன் கிழமை இடம் பெற்றது.**



(படம்-மகாலிங்கம்)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -21 மத்தியூஸ் வீதி, ஆதன இல 7/6, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் என்.ரவியும் பெண் ஜான்சிராணியும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யோசப் ஜான்சிராணி (முன்னர் ரவி ஜான்சிராணி) 08.08.2018 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யூல் பிலைனன் அன்ரன் றஞ்சித் முகதாவில் வரையப்பட்ட 66 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு குளி 11 இனை கனகேஸ்வரன் கைம்பெண் மேரிஆன் என்பவருக்கு நன்கொடையளிக்கப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "குளத்து வயலும் மறுபிரிவுகளும்" கிராம சேவையாளர் பிரிவு J/75 சுண்டுக்குளி தெற்கு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஜே.எச்.ஆர் பேரின்பநாயம் 10.02.1972 திகதியில் அளந்து பிரிவிட்டு வரைந்த 1092 ஆம் இலக்கப்படத்தில் "1" எனும் எண்ணால் சுட்டப்பட்ட பாகம் குளி (11) பதினொன்று கல் வீடும் வடமேற்கு எல்லைச் சுவர்களும் பயிர் வகைகளும் மற்றும் மதற்குச் சேர்ந்தவைகளும்,

இதன் எல்லைகள்:
கிழக்கு: குறித்த படத்தில் "2" எனும் எண்ணால் சுட்டப்பட செபஸ்ரியாம்பிள்ளை பெண் திரேசம்மாவுக்குரிய ஆதனம்.
வடக்கு: யோசேப்பு பாலசிங்கத்துக்கு உரிய ஆதனம்.
மேற்கு: றோட்டு.
தெற்கு-மனுவல் யோசேப்புக்குரிய ஆதனம்.
இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கனகேஸ்வரன் கைம்பெண் மேரிஆன் என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கனகேஸ்வரன் கைம்பெண் மேரிஆன் என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி-3114)

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 450 | 380 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 450 | 700 |
| தக்காளி | 600 | 650 | 600 | 500 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 500 | 500 | 330 | 500 |
| கரட் | 800 | 900 | 600 | 700 | 900 |
| பூசணி | 120 | 180 | 160 | 170 | 160 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 400 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 1000 | 700 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 170 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 200 | 300 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 350 | 450 | 450 | 320 | 450 |
| பீற்றூட் | 600 | 550 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 900 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1500 | 1400 | 1200 | 1250 | 1800 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 100-160 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 250 | 150 | 120-220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| சரப்பலா | -- | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தென்கொரிய ஜனாதிபதி தேர்தலில் லீ ஜே-மியுங் அபார வெற்றி



(சியோல்)

தென்கொரிய ஜனாதிபதி தேரதலில் லீ ஜே-மியுங் அபார வெற்றி பெற்றுள்ளார்.

இராணுவச் சட்ட நெருக்கடியின் கொந்தளிப்பிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதாகவும், வளர்ச்சி மந்தநிலை மற்றும் உலகளாவிய பாதுகாப்புவாத அச்சுறுத்தலால் தத்தளிக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாகவும் சபதம் செய்தார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திடீர்த் தேர்தலில் லீயின் தீர்க்கமான வெற்றி, ஆசியாவின் நான்காவது பெரிய பொருளாதாரத்தில் ஒரு பெரிய மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

இராணுவச் சட்ட முயற்சியால் ஆழமாக பாதிக்கப்பட்ட ஒரு நாட்டை மீட்பது முதல், ஒரு முக்கிய வர்த்தக பங்காளியும் பாதுகாப்புக் கூட்டாளியுமான அமெரிக்காவின் கணிக்க முடியாத பாதுகாப்புவாத நடவடிக்கைகளைச் சமாளிப்பது வரை, கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களில் ஒரு தென்கொரியத் தலைவருக்கு மிகவும் கடினமான சவால்களை அவர் எதிர்கொள்கிறார்.

தேசிய தேர்தல் ஆணையத் தரவுகளின்படி, 100% வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், பதிவான கிட்டத்தட்ட 35 மில்லியன் வாக்குகளில் லீ 49.42% வாக்குகளைப் பெற்றார்.

அதே நேரத்தில் பழமைவாத போட்டியாளரான கிம் மூன்-சூ 41.15% வாக்குகளைப் பெற்றார்.

இது 1997இற்குப் பின்னர் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கான அதிகபட்ச வாக்குப்பதிவைக் கொண்டு வந்தது. 61 வயதான முன்னாள் மனித உரிமை சட்டத்தரணி, செவ்வாய்க்கிழமை தேர்தலை யூனின் இராணுவச் சட்டம் மற்றும் அவரது மக்கள் சக்தி கட்சி இந்த துரதிர்ஷ்டவசமான நடவடிக்கையைத் தடுக்கத் தவறிய தற்கு எதிரான "தீர்ப்பு நாள்" என்று அழைத்தார். (நி-8)

## 5 நிமிடங்களுக்கு ஒரு ஸ்கிரீன் ஷாட்
## வடகொரியாவின் உச்சகட்ட கட்டுப்பாடுகள்

(பியாங்யாங்)

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் அரசாங்கத்தின் கீழ், அந்நாட்டு மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த உண்மை தான். ஆனால், இந்த அளவிற்கா? என ஆச்சர்யப்பட வைக்கும் வகையில் இருந்தது, ஒரு செல்போன் மூலம் கசிந்த இரகசியங்கள்.

கடந்த ஆண்டு வடகொரியாவில் இருந்து கடத்திவரப்பட்ட செல்போன் ஒன்று, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அப்போது, ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஒரு கொடுங்கோல் அரசன் போல செயற்படுவதும், தென்கொரிய மற்றும் மேற்கத்திய கலாசாரங்கள் எதுவும், வடகொரியாவில் புகுந்துவிடாத வண்ணம், கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருப்பதும் அம்பலமானது.



வடகொரியாவில் பயன்படுத்தும் செல்போன்கள், இணையசேவையை பயன்படுத்த முடியாத வகையிலும், தென்கொரிய சீரியல்கள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளை பார்க்க முடியாத வகையிலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால், தென்கொரியாவில் பெண்கள் தங்களைவிட வயதில் மூத்த நபர்களையோ, நண்பர்களையோ குறிக்கும் "ஒப்பா" என்கிற வார்த்தையை செல்ஃபோனில் டைப் செய்தால், அது உடனே ஆட்டோ கரெக்ட் ஆகி "காம்ரேட்" அதாவது தோழர் என சுயமாக மாறிக் கொள்ளுமாம்.

அது மட்டுமல்ல.. போனில் தென்கொரியா என டைப் செய்தால், பொம்மை அரசு என அந்த சொற்றொடர் மாறும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆச்சரியமே இனிமேல் தான் உள்ளது.

கடத்தி வரப்பட்ட அந்த செல்போன், பயனர்களை கண்காணிக்க அவர்களுக்கே தெரியாமல் 5 நிமிடங்களுக்கு ஒருமுறை தானாகவே ஸ்கிரீன் ஷாட் எடுக்கிறது. இந்த ஸ்கிரீன் ஷாட் புகைப்படங்கள் அனைத்தும் அதிகாரப்பூர்வ நபர்கள் மட்டுமே பயன்படுத்தும் ஓர் இடத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன.

இந்த ஸ்கிரீன் ஷாட் புகைப்படங்களை வைத்து யாரேனும் தவறான நடவடிக்கையில் ஈடுபடுவது தெரியவந்தால், அவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படுமாம்.

சுதந்திரம் என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் என்ன? என்று கேட்டு கோடிட்டால் அதில் வடகொரியா என இட்டு நிரப்பலாம்... அந்த அளவிற்கு ஜனாதிபதி கிம் ஜாங் உன், தன் மக்களை அடக்கி ஆள்கிறார். (நி-8)

## அமெரிக்காவிற்குள் அபாயகர கிருமியை கடத்திய சீன ஆராய்ச்சியாளர் கைது

(வோஷிங்டன்)

புசேரியம் கிராமினேரம் என்ற உயிரியல் நோய்க் கிருமியை அமெரிக்காவுக்கு அவர் கடத்தி வந்துள்ளார்.

இந்த பூஞ்சை கோதுமை, பார்லி, சோளம் மற்றும் அரிசி விளைச்சலில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அமெரிக்காவுக்கு ஆபத்தான உயிரியல் நோய்க் கிருமியை கடத்தியதாக சீனாவை சேர்ந்த 2 ஆராய்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதை அமெரிக்க எப்.பி.ஐ இயக்குனர் காஷ் பட்டேல் உறுதிப்படுத்தினார்.

அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழக ஆய்வகத்தில் சீனாவை சேர்ந்த யுன்கிங் ஜியான் என்ற பெண் பணிபுரிந்து வந்தார். இவரது காதலரும் சீனாவில் ஆராய்ச்சியாளருமான ஜுன்யோங் லியு, தனது காதலியை பார்க்க அமெரிக்காவுக்கு வந்துள்ளார். அப்போது அவர் புசேரியம் கிராமினேரம் என்ற உயிரியல் நோய்க்கிருமியை அமெரிக்காவுக்கு கடத்தி வந்துள்ளார். இந்த நோய்க் கிருமியை மிச்சிகன் பல்கலைக்கழக ஆய்வகத்தில் ஆய்வு செய்து மேலும் மேம்படுத்த திட்டமிட்டு இருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த நோய்க் கிருமி விவசாய பயங்கரவாத ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புசேரியம் கிராமினேரமின் நச்சுகள் மனிதர்கள் மற்றும் கால்நடைகளில் வாந்தி, கல்லீரல் பாதிப்பு மற்றும் இனப்பெருக்க குறைபாடுகளையும் ஏற்படுத்தும் என தகவல்கள் வெளியாகி உள்ளன. (நி-8)


## சிந்து
## கடும் ப

(இஸ்லாமா
பஹல்காம்
தலைத் தொட
ஒப்பந்தத்தை
வைத்ததால் பா
சிரமங்களை

பாகிஸ்தான் அரசாங்கம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, ஜூன் 2, 2024 உடன் ஒப்பிடும்போது, ஜூன் 2, 2025 நிலவரப்படி, சிந்து நதி நீர் அமைப்பில் (பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திற்குள்)

கிடை
சதவீ
தெ
வரு
வாரா
நாட்க
வாய்

## கிரிமியா பாலத்
## ரஷ்யாவிற்கு



(மொஸ்கோ)

கிரிமியாவிற்குச் செல்லும் ரஷ்யாவின் பாலத்தை நீருக்கடியில் வெடிபொருட்களால் தாக்கியதாக உக்ரைன் தெரிவித்தள்ளது.

நேட்டோ அமைப்பு நாடுகளில் உக்ரைன் இணையக்கூடாது என்பதற்காக, அதன் அண்டை நாடான ரஷ்யா, கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி முதல் அந்நாட்டின் மீது போர் தொடுத்து வருகிறது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் போர், மூன்று ஆண்டுகளைக் கடந்தும் தீவிரமாக நடை

பெற்
அமெ
றுள்ள
நடை
துவதி
இ
பெற்
இழு
நிலை
இரா
உக்
மான
உ
வெ
நடவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துநதி நீர் நிறுத்தம்!

## ...ம பஞ்சத்தை நோக்கி பாகிஸ்தான்

(...மாமாபாத்)

**...காம் பயங்கரவாதத் தாக்கு ...தொடர்ந்து சிந்துநதி நீர் ...தை இந்தியா நிறுத்தி ...ல் பாகிஸ்தான் கடுமையான ...ளை எதிர்கொள்கிறது.**



... கிடைக்கும் நீரின் சதவீதம் 10.3 சதவீதம் குறைந்துள்ளது.


தென்மேற்கு பருவமழை வருவதற்கு இன்னும் நான்கு வாரங்கள் இருப்பதால், வரும் நாட்களில் நிலைமை மோசமடைய வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

கடுமையான வெப்ப அலைகள் ஆகியவற்றால் விவசாயத்துறை கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

இந்த கோடையில் நாட்டின் மொத்த நீர் ஓட்டத்தில் 21 சதவீத பற்றாக் குறையையும், இரண்டு முக்கிய அணைகளில் சுமார் 50 சதவீத நீர் இருப்பு பற்றாக்குறையையும் எதிர்கொள்வதாக பாகிஸ்தான் கடந்த மாதம் கூறியது.

அணை அதிகாரிகள் மற்றும் நீர்ப்பாசன விநியோக கண்காணிப்பு நிறுவனங்கள் நீர்த் தேக்கங்களில் இருந்து தண்ணீரை நியாயமான முறையில் பயன்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது. (நி-8)

## ...லத்தைத் தாக்கிய உக்ரைன் ...ற்கு மீண்டும் அதிர்ச்சி!



... பெற்று வருகிறது. இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ட்ரம்ப், இவ்விரு நாடுகளிடையே நடைபெற்று வரும் போரை நிறுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறார்.

இதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், அதில் இழுபறி நீடித்து வருகிறது. இந்த நிலையில், சமீபத்தில் ரஷ்யாவின் இராணுவ விமானத்தளங்கள் மீது உக்ரைன் முதன்முறையாக உக்கிரமான தாக்குதலை நடத்தியது.

உக்ரைன் இராணுவம், ஸ்பைடர் வெப் எனக் குறிப்பிடப்பட்ட ஒரு இரகசிய நடவடிக்கையின் கீழ், ரஷ்யாவின் உள் பகுதிகளில் உள்ள இர்குட்ஸ்க்முர் மான்ஸ்க், இவானோவோ, ரய சான் மற்றும் அமூர் ஆகிய ஐந்து இராணுவ விமானத் தளங்களை இலக்காகக் கொண்டு ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் நீண்ட தூரத்தில் உள்ள இலக்குகளை தாக்கும் வல்லமை பெற்ற ரஷ்யாவின் TU-95, TU-22M, A-50 போன்ற முக்கிய இராணுவ விமானங்கள் உட்பட 41 விமானங்கள் அழிக்கப்பட்டதாக உக்ரைன் தெரிவித்திருந்தது. இந்த நிலையில், கிரிமியாவிற்குச் செல்லும் ரஷ்யாவின் பாலத்தை நீருக்கடியில் வெடிப் பொருட்களால் தாக்கியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. (நி-8)

## மகனின் ஆடம்பர வாழ்க்கையால் பதவி இழந்த மங்கோலிய பிரதமர்



(மங்கோலியா)

மங்கோலியாவில் பிரதமர் லவ்சன்னம்ஸ்ரைன் தலைமையிலான மங்கோலிய மக்கள் கட்சி ஆட்சி நடைபெறுகிறது. இவரது மகன் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதற்கிடையே அவர் தனது காதலியுடன் சுற்றித் திரிந்த புகைப்படங்கள் சமூகவலைதளங்களில் வைரலாகின. இதில் விலை உயர்ந்த பேக் மற்றும் ஏராளமான பைகள் இருந்தன. இது பெரும் விவாத பொருளான நிலையில் பிரதமர் பதவி விலகக் கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

ஆனால் பிரதமர் லவ்சன்னம்ஸ்ரைன் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்து வந்தார்.

தொடர் போராட்டங்கள் நடைபெற்று வந்த நிலையில் பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதில் போதிய பெரும்பான்மையை அவர் பெறவில்லை. எனவே தனது பதவியை லவ்சன்னம்ஸ்ரைன் இராஜினாமா செய்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி ரி.வியின் இசைத்தேடல் நிகழ்ச்சி ஆரம்பம்

இலங்கையின் தமிழ் இசைத்துறையில் புரட்சிகரமான பங்களிப்பை செய்து வரும் சக்தி TV, பலராலும் பாராட்டப்பட்ட SHAKTHI CROWN இசைத் திறமைத் தேடல் நிகழ்ச்சியின் இரண்டாவது Season மிகப் பிரமாண்டமாக ஆரம்பிக்கிறது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தமிழ் இசைத் துறையில் முதன்மையான பங்களிப்பை வழங்கியுள்ள சக்தி TV பாட்டு பாடவா, இளைய கானம், சக்தி ரேடியோ சூப்பர் ஸ்டார், இசை இளவரசர்கள்,இசை மகா யுத்தம் போன்ற திறமைத் தேடல் நிகழ்ச்சிகளின் மூலமாக பல இளைஞர்களின் இசைக் கனவுகளை நனவாக்கியது. அந்த வரிசையில் உருவான மிக முக்கியமான பல்வகைமையாகப்பட்ட நிகழ்ச்சியாக SHAKTHI CROWN பார்க்கப்படுகிறது.

இம்முறை போட்டியாளர்களின் இசைப் பயணத்தை வழிநடத்த இலங்கையின் மூன்று இளம் திறமைமிக்க இசைக்கலைஞர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். பிரகாஷ் கே, ஷமீல், மற்றும் மிர்துஷா ஆகியோர் இசையை ஆழமாகப் புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாது ஆர்வத்துடனும், புதுமைகளுடனும் தங்கள் அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு இளைஞர்களின் கலைத் திறனை உச்சத்துக்கு அழைத்துச் செல்லவிருக்கின்றனர்.

SHAKTHI CROWN Season 2 உலகளாவிய கட்டமைப்பில் 144 போட்டியாளர்களுடன், ஆறுமாதங்களாக நீடிக்கும் போட்டியாக நடைபெறவிருக்கிறது. இத்தனை விரிவான மற்றும் பன்முகத்தன்மையுடைய போட்டி தமிழ் தொலைக்காட்சித் துறையின் மிகப் பெரிய இசைப் போட்டிகளில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.

SHAKTHI CROWN Season 2 நிகழ்ச்சியின் ஆரம்பக் கட்ட படப்பிடிப்பு மே 29ஆம் திகதி Stein Studios இரத்மலானையில் மாபெரும் நிகழ்வாக நடைபெறவுள்ளது. நிகழ்ச்சியினை நேயர்கள் ஜூன் 7ஆம் திகதி முதல் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு சக்தி TVயில் கண்டுகளிக்கலாம்.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1978- இந்து
நட்சத்திரம்: பூசம்
1ல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA, Business(own)
எதிர்பார்ப்பு: சைவபோசனம், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15581

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி-பா-16
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BCom,Manager(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15582

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி-பா-16
உயரம்:6'1"
தகைமை/ தொழில்:MBA, Accountant(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15583

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி-பா-31
உயரம்:5'5"
தகைமை/தொழில்: HNDA,BCom,DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15585

பிறப்பு: 1982-இந்து
நட்சத்திரம்:கேட்டை
12 இல் செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: O/L.கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15588

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1988 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கிபா-37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree, Teacher, (Australia).
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/15003

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி.பா:16 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:HND IT,B.Com, Bsc,Banker
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், தனியார் பட்டதாரி
தொ.இ: G/10870

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:மகம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc,Teacher
எதிர்பார்ப்பு:அரச வேலை, வெளிநாடு-(லண்டன் கனடா)
தொ.இ: G/13037

பிறப்பு-1993 -இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா-47 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.Com,MBA,Tutor Mentor
எதிர்பார்ப்பு: படித்த,உத்தியோகமுள்ள ஆண்
தொ.இ: G/13978

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: -28 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: College, Bsc, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/13990

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 388



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கடன் தீருமா?

ஒரு நபர் காலிலே செருப்பு போடாமல் கடுமையான வெயிலிலே நடந்து போய்கொணடிருந்தார். எதிரிலே வந்த ஒருவன்"ஏன் அண்ணா இப்படி? ஒரு செருப்பு வாங்கி போடக்கூடாதா"-என்றான். உடனே அந்த நபர் தன் கையிலேயிருந்த ஒரு பைக்குள்ளே கையைவிட்டு பிய்ந்து போன ஒரு ஜோடி செருப்பை எடுத்து அவனிடம் காட்டினார். நான் எங்கே போனாலும் செருப்போடுதான் போவேன். செருப்பில் லாமல் போவது இல்லை. போட்டுக்கொண்டு நடந்தால் இது தேய்ந்து போய்விடும் என்பதற்காக பத்திரமாக பையிலே வைத்து எடுத்துக்கொண்டு போகின்றேன்"என்றார்.

இது போல ஆசாமிகளைப் பற்றி கிராமங்களிலே உள்ள பெரியவர்கள் நிறைய கதைகள் சொல்வார்கள். அது போல கேள்விப்பட்ட கதைகளிலே இதுவும் ஒன்று. செருப்பைக் காலிலே போட்டுக்கொண்டு போனால் தேய்ந்து போய்விடும் என்று நினைக்கின்ற அந்த ஆசாமி ஒருநாள் ஒரு தெருவழியாக நடந்து போய்க்கொண்டிருந்தாராம். எதிரிலே ஒரு பிச்சைக்காரன் வந்திருக்கின்றான். "ஐயா,தர்மம் பண்ணுங்கள்" என்று கேட்டி ருக்கிறான். சில்லறை இல்லை. போ என்று விரட்டியிருக்கின்றான் இவன்.

அந்த சமயத்திலே இவனுடைய சிநேகிதன் ஒருவன் அங்கே வந்திருக்கின்றான். இவன் விரட்டுவதைப் பார்த்துவிட்டு இது போல விரட்டுவது பாவம். இப்போது இவனுக்கு நான் ஒரு ரூபாய் தருமம் பண்ணப் போகிறேன். உனக்கும் ஒரு ரூபாய் கடன் தருகிறேன்.அதை என்னிடம் வாங்கி நீ இவனுக்குப் போடு என்றான். நம் ஆள் வேறு வழியில்லாமல் அதை வாங்கி பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டான். அதன்பின் தன்னுடைய சிநேகிதனைப் பார்த்து இப்போது என்னிடம் சில்லறை இல்லை. நாளைக்கு வீட்டுக்கு வா. தருகிறேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.இவனும் அந்த ஒரு ரூபாயை விடுவதாக இல்லை மறுநாள் காலையிலே சரியாக அவன் வீட்டு வாசலிலே போய் நின்றான். அவன் பார்த்தான். 999 ரூபாய் வைத்திருக்கின்றாயா?என்று அவனைப் பார்த்து கேட்டான். ஏன் என்றான் அவன்.

என்னிடம் 1000 ரூபாய் தாளாக இருக்கின்றது.நீ 999 ரூபாய் கொடுத்துவிட்டு 1000 ரூபாயை வாங்கிக்கொண்டு போ என்றான். சரி,ஒரு ரூபாயை நாளைக்கு வாங்கிக்கொள்கிறேன் என சொல்லிவிட்டு திரும்பிப் போய்விட்டான்.மறுநாள் வந்தான். அவன் பார்த்தான். இன்று உன்னிடம் கொடுப்பதற்காக ஒரு ரூபாயை பையிலே போட்டுவைத்திருந்தேன்.அதை எலி தூக்கிக்கொண்டு போய்விட்டது என்றான். இப்படி அவன் தினம் ஒரு காரணம் சொல்லிக்கொண்டே இருந்தான். இவனும் அந்த ஒரு ரூபாயை விடுவதாக இல்லை. தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தான். இவன் விடாக்கண்டன்,அவன் கொடாக்கண்டன்.

ஒரு நாள் விடியற்காலை நேரம். தெருக்கோடியிலே கடன் கொடுத்தவன் வந்துகொண்டிருந்தான். இவன் அதைப் பார்த் துவிட்டான். இன்று எப்படி அவனை ஏமாற்றுவது என்று பார்த்தான். மனைவியிடம் யோசனை கேட்டான். "நீங்கள் உயிரோட இருக்கிறவரைக்கும் அவர் உங்களை விடப் போவதில்லை என்றாள் அவர் மனைவி. உடனே இவனுக்கு உடனே ஒரு யோசனை வந்தது. மனைவியிடம் மெதுவாக சொன்னான். இதோ பார், நான் இறந்து போனது போல இப்படி கீழே விழுந்து கிடக்கிறேன். நீ அழுதுகொண்டிரு. வருபவன் பார்த்துவிட்டு பேசாமல் போய்விடுவான். இப்பொழுது இதைத் தவிர வேறே வழி எதுவும்எனக்கு தெரியவில்லை என்று சொல்லி விட்டு பொத்தென்று கீழே விழுந்து கண்ணை மூடிக்கொண்டான். அந்த அம்மா அழுதுகொண்டு நின்றாள்.

கடன் கொடுத்தவன் வந்து பார்த்தான். அந்த அம்மா சொன்னார்கள். சாகப் போகின்ற போது கூட உங்களுக்கு ஒரு ரூபாய் தரவேண்டும் என்று தான் சொல்லிக் கொண்டிருந்தார். திடீர் என்று கண்ணை மூடிக் கொண்டார் என்றாள். வந்தவன் விடாக் கண்டன் இல்லையா? இது எல்லாம் நடிப்பு என்று மனதுக்குள்ளே புரிந்து கொண்டான். பின்பு சொன்னான்.ஒரு ரூபா எனக்குப் பெரிது இல்லை. அது போனா போகிறது. செலவோட செலவாக இவன் பிணத்தை எரிக்கின்ற செலவையும் நானே ஏற்றுக் கொள்கின்றேன். என்னால் தானே அவன் உயிர் பிரிந்தது என ஆரம்பித்தான்.

அந்த அம்மாவுக்கு திடுக்கென்று தூக்கிப்போட்டது. ஒரு குடம் நீரை கீழே கிடப்பவன் மேல் ஊற்றினான். குளிர் தாங்காமல் அவன் கை லேசாக ஆடியது.பார்த்தீர்களா இறந்ததுக்கு பின்பு கூட எனக்கு அந்த ஒரு ரூபாயைக் கொடுத்து விடவேண்டும் என்று கை துடிக்கிறது என்றான் அவன். அதற்குப் பின் மயானத்திற்கு கொண்டு போனார்கள். இருட்டிப் போய் விட்டது.அங்கே ஒரு பள்ளத்திலே திருடர்கள் சில பேர் வந்து கொள்ளையடித்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதை ஓரக் கண்ணால் பார்த்த இவன் பாடை யிலேயிருந்து லேசாக எழுந்திருச்சான்.

அய்யய்யோ பிணம் எழுந்திரிக்குது என்று கத்திக் கொண்டே அந்த திருடர்கள் ஓடி போய்விட்டார்கள். இந்த பிணம் எழுந்து போய் அவர்கள் போட்டுப் போன பணத்தின் அருகே உட்கார்ந்து கொண்டு அதை பார்த்துவிட்டு அந்த ஒரு ரூபாய் கடன் கொடுத்தவன் வந்தான். இப்போதாவது என் கடனை கொடு என்று கேட்டான் பரிதாபமாக உன் கடனை இப்பவே கொடுக்கிறேன். ஆனால் ஒரு கேள்வி என்றான் அவன். என்ன என்றான் இவன்.உங்களிடம் 999 ரூபா இருக்கா? என்றான். அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீன்-5 உலக சுற்றாடல் தினம்

1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்தை நடை முறைப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது நிறுவப்பட்டது. இது தேசிய சுற்றாடல் சட்டத்தின் அதிகாரங்களுக்கு ஏற்ப இலங்கைத் தீவின் சுற்றாடலை பாதுகாத்தல். முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான விரிவான ஒழுங்குவிதி முறைகளை நடைமுறைப்படுத்துகின்றது.

சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது உன்னதமானசேவையினூடாக சுத்தமான மற்றும் பசுமையான சுற்றாடல் என்ற நோக்கத்தை முன்னிறுத்தி.பொது மக்களின் பங்களிப்பை ஊக்குவித்தல். நீதியை அமுலாக்கல். உயர் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் சுற்றாடல் கல்வியினூடாக இலங்கைச் சுற்றாடலின் தரத்தை பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்வதில் முன்னிற்கும் சமுதாய தலைமைத்துவத்தை உருவாக்குதல் என்ற சிறந்த பணியைச்செய்கின்ற தேசத்தின் முன்னோடியாகும்.

அதன்படி. சுற்றாடலைப் பாதுகாத்தல். முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சுற்றாடல் மாசடைவதைத் தடுத்தல். குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது செயற்படுகிறது. சுற்றாடல் நிலையை பராமரிக்கும் உயர் நோக்குடன் இதற்குத்தேவையான பல விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### அனைவருக்கும் உயர் தரமான தூய காற்றை வழங்க....

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றுப்புறவளி தரத்தின்ஒழுங்குவிதிகள் மூலம். நமது தீவின் சுற்றப்புற வளிமண்டலத்தின் தரமான நிலையைக்கண்காணிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனெனில் காற்று தரமானது மிகவும் நல்லநிலையில் இருத்தல் உயிரினங்களின் இருப்பிற்கு இன்றியமையாத காரணியாகும்.

### வாகன வெளியீடுகளுக்கான தீர்வுகள்...


ஆராய்ச்சி அறிக்கைகளின்படி. வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசுபடுத்தும் வாயுக்கள். நமது தீவில் காற்றின் தரத்தை மாசுபடுத்தும் முக்கிய மூலங்களில் ஒன்றாக இனம் காணப்பட்டுள்ளது.

சில முக்கிய நகர்ப்புற பகுதிகளில் காற்றின் தரம் குறைவதற்கு காரணமான காற்றை மாசுபடுத்தும் மூலங்களில். வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசாக்கிகள் சுமார் ஐம்பது சதவீததிற்கும் (50%) அதிகமாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனவே. இந்த நிலையை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காக. தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ்.2003 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிகள் (காற்று உழிழ்வு. எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதி தரநிலைகள்) வெளியிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில். அந்த விதிமுறைகள் EURO 4 அல்லது அதற்கு மேலான வெளியீட்டு தரநிலைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்டுள்ளன.

### தொழிற்சாலைகளின்வெளியீடுகளுக்கான தீர்வுகள்...

மற்றொரு பரிமாணமான தொழிற்சாலைகளால் ஏற்படும் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தப்படுவதற்காக. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் முறைமை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறைகளைப் பயன்படுத்தி ஒழுங்குபடுத்தும் பணிகளை மேற்கொள்கிறது. அதன்படி. நம் நாட்டில் 50.000 இற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் செயல்முறை மூலம் சுற்றாடல் மாசாக்குவதை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தப பட்டு இயங்குகின்றன. அவற்றில். சுமார் 900 தொழிற்சாலைகள் உயர் காற்று மாசுபடுத்திகளை வெளியிடும் தொழிற்சாலைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.



மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தத் தொழிற்சாலைகளுக்கு காற்று மாசுக்கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தி வழிகாட்டுதல்களை வழங்கி ஒழுங்குபடுத்தியுள்ளது.

தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும் மாசுபடுத்தும் வாயுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக. 2019 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் (நிலையான மூலங்களின் வெளியேற்றுகைக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஒழுங்குவிதிமுறைகளின் கீழ்.தொழிற்சாலைகளால் வளிமண்டலத்திற்கு வெளியிடப்படும் காற்று மாசுபடுத்திகளுக்கான அனுமதிக்கப்பட்ட எல்லை வரம்புகள் மற்றும் தொடர்புடைய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### பிளாஸ்டிக் மாசுபாடு மற்றும் தீர்வுகள்.....

இந்த ஆண்டு சுற்றாடல் தினத்தின் கருப்பொருள்: பிளாஸ்டிக்கால் ஏற்படும் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருவோம்!!! **(Ending Plastic Pollution)** ஆகும்.

பிளாஸ்டிக் உற்பத்தி. மறுசுழற்சி. கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் எரியூட்டிகளின் மூலம் எரித்தல். கழிவு பிளாஸ்டிக்குகளைப் பயன்படுத்தி வலுசக்தி உற்பத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள். சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தின் கீழ் செயற்பட வேண்டிய அவசியமான செயற்பாடுகளாக தேசிய சுற்றாடல் சட்டத்தால் காட்டப்பட்டுள்ளன. இந தச் செயற்பாடுகள் தொடர்பான தொழில்களில் ஏற்படும் சுற்றாடல் மாசுபாடு. சுற்றாடல் பாதுகாப்பு உரிம முறைமை வழியாக ஒழுங்குபடுத்தப்படுகிறது.

மேலும். இத்தகைய தொழில்கள் மற்றும் செயற்பாடுகளால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக. தேசிய சுற்றாடல் (நிலையான மூலங்களின் வெளியேற்றுகைக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிமுறைகள் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

### திறந்தவெளிச் சூழலில் பொலித்தீன் பிளாஸ்டிக் எரிப்பு...

மனித நடவடிக்கைகளால் ஏற்படும் வளிமண்டல மாசுபாட்டிற்கான மற்றொரு முக்கியகாரணமாக. திறந்தவெளிச் சூழலில் குப்பை எரித்தல். குறிப்பாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உள்ளடங்கலாக எரித்தல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக். பொலித்தீன் போன்ற கழிவுகளை திறந்தவெளியில் எரிப்பதால். உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் புற்று நோயை உண்டாக்கக் கூடிய வாயுக்களான டையாக்சின்கள் மற்றும் / பியூரன்கள் (PCDDs,PCDFs). பச்சைவீட்டு வாயுவான கார்பன்டையாக்சைடு ($CO_2$). கருங்கார்பன் (Black Carbon) மற்றும் மைக்ரோ பிளாஸ்டிக்குகள் போன்றவை வளிமண்டலத்தில் வெளியிடப்படுவதால். உயிரினங்களின் உயிர் வாழ்வதற்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் உள்ளது. வீட்டு மட்டத்தில் மிக அதிகமாக நடைபெறும் இந்த முறையற்ற செயற்பாடு காரணமாக. முழு சமுதாயமும் கடுமையான சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.

இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக. 2017 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிகளின்படி. பிளாஸ்டிக் அடங்கிய குப்பைகளை திறந்தவெளியில் எரிப்பதைத் தடை செய்யும் ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. நாடெங்கிலும் இந்த ஒழுங்குவிதிகள் இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எத்தனை சட்டங்கள். உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும். மக்களின் நேரடி தலையீடு மற்றும் நேர்மையான செயற்பாட்டுப் பங்களிப்பு இல்லாமல் இத்தகைய ஒழுங்கு விதிகளுக்கு முரணான முறையற்ற செயல்களைக்கட்டுப்படுத்துவது மிகவும்சவாலானதே.

### தானியங்கி நிகழ்நேர காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்கள்...

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால். வாகன உமிழ்வுகளுக்கான நிதியுதவி நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட தானியங்கி நிகழ நேர (Reference Grade) காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்கள் இரண்டின் (2) உதவியுடன் காற்றுத் தரக் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த நிலையங்கள் பத்தரமுல்லை மற்றும் கண்டி நகரில் அமைந்துள்ளன. அதனுடன் இணைந்ததாக நாடுமுழுவதிலும் பல முக்கிய நகரங்களில் நுண் சென்சார் (Micro Sense) காற்றுத் தரக் கண்காணிப்பு கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. தீவின் வளிமண்டல காற்றுத்தர நிலைகளை பகுப்பாய்வு செய்ய பிற ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் காற்றுத்தர கண்காணிப்பு தரவுகள் வழியே பெறப்படும் தகவல்கள். மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் பெறப்படும் தரவுகளைப் பயன்படுத்தி. வளிமண்டல காற்றுத் தரம் தொடர்பான விவரங்களைப் பொது மக்களுக்கு விழிப்புணர்வாக வழங்க தேசிய காற்றுத் தரக் குறியீடு (AQI) பயன்படுத்தப்படுகிறது. காற்றுத் தரக் குறியீடு என்பது. வளிமண்டலத்தின் மூலக்கூறு அடிப்படையில் ஏற்படக்கூடிய சுகாதார பாதிப்புகளைச் சரியாக புரிந்து கொள்ளவும். சுற்றுப்புறக் காற்றில் உள்ள மாசுபடுத்திகள் மற்றும் அதன் விளைவான சுகாதாரப் பாதிப்புகளுக்கிடையேயான உறவினை விளக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு அறிவியல் அடிப்படையிலான நவீன கருவியாகும்.

காற்றுத் தரக் குறியீட்டு மதிப்பு (AQI) 100 இனை விட குறைவாக இருக்கும் போது. சுற்றுப்புறக்காற்று எந்தவொரு தீவிரமான சுகாதார ஆபத்தையும் ஏற்படுத்தாது அல்லது சுகாதார பாதிப்புகள் மிகக் குறைவாகவே இருக்கும் என கருதப்படுகிறது. இது திருப்திகரமான காற்றுத் தரத்தைக் குறிக்கிறது. ஆனால். எந்த நேரத்திலும் காற்றுத் தரக் குறியீட்டு மதிப்பு (AQI) மதிப்பு 100 இனை விட அதிகரிக்குமானால். சுற்றுப்புறக் காற்று ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிலையை எட்டியுள்ளது எனக் கணிக்கப்படுகிறது.

எங்கள் தீவில் உள்ள காற்றுத் தரத்தை கண்காணிக்கும் கருவிகளின் தரவுகளின்படி. வளிமண்டல காற்றுத்தர நிலைகள் பெரும்பாலான நாட்களில் நல்ல நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் சமீப காலங்களில். பல்வேறு வானிலைக் காரணிகளால் நாடுகடந்த காற்று மாசுகள் நாட்டிற்குள் நுழைவதன் காரணமாக. அக்டோபர் முதல் மார்ச் மாதங்களுக்கு இடையிலான சில நாட்களில். சுற்றுப்புறக் காற்றுத் தர ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட எல்லைகளைவிட துகள்மாசுகளின் அளவு அதிகமாகவுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை நாடுகடந்த காற்று மாசுகள் நாட்டுக்குள் நுழைந்து மக்கள் உடல்நலத்திற்கேற்படுத்தும் பாதிப்புகளை கட்டுப்படுத்தும் நோக்கில். காற்றின் தரம் மோசமடையும் அவசர நிலைகளுக்கு எதிர்கொள்வதற்காக. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து ஒரு அவசரநிலைப் பதிலுறுத்தல் செயற்றிட்டத்தை (Contingency Response ActionPlan) உருவாக்கியுள்ளது. இந்த அவசரநிலைப் பதிலுறுத்தல் செயற்றிட்டம். சுற்றுப்புறக் காற்றில் மாசுக் கூறுகள் திடீரென அதிகரித்து பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு ஆபத்து ஏற்படுவதைத் தடுக்கவோ அல்லது அதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகளை குறைக்கவோ தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஒரு அடித்தளத்தினை வழங்குகிறது.

நாம் சுவாசிக்கும் காற்று மிகச் சுத்தமாக இருக்க வேண்டும் என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல. அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படை உரிமையாகும். வளி மண்டல மாசுபாட்டால் ஏற்படும் பாதிப்புகள் காலநிலை மாற்றங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. எதிர்பாராத வளிமண்டல மாசுபாட்டால் தீவிர பாதிப்புகளை எதிர்கொள்ளும் அபாயம் உள்ள நாடாக இலங்கை கருதப்படும் நிலையில். தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிகளின் படி செயற்படுகின்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது நாட்டின் வளிமண்டலத்தை சாதகமான நிலையில் பேணுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் முழு சமுதாயத்தின் நலனுக்காக பல சிறந்த சேவைகளையும் வழங்கி வருகிறது.

இதுவே மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உன்னதமான இலட்சியம்

**வளித்தரம், ஒலி மற்றும் அதிர்வு கண்காணிப்பு பிரிவு
மத்திய சுற்றாடல் அதிகார சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 791





என்று சொல்லித் தொலைப்பதற்கு என்ன? வீணாக ஏன் அபாயத்துக்கு உள்ளாக வேண்டும்?" என்றான் வைஷ்ணவன். "எல்லாம் சகவாச தோஷந்தான்!" என்றான் வந்தியத்தேவன்.

"யாருடைய சகவாசத்தைச் சொல்கிறாய்? இத்தனை தவறு செய்யும்படி நான் உனக்கு ஒருநாளும் சொன்னதாக நினைக்கவில்லையே?"

"உம்மைச் சொல்லவில்லை ஐயா! பொன்னியின் செல்வரைச் சொல்லுகிறேன். அவரைப் பார்த்துப் பழகிய பிறகு, பொய் சொல்லுவதற்கு உள்ளம் இடம் கொடுக்கவில்லை" "உயிர் தப்புவதற்காகக் கூடவா? அவ்வளவு சத்திய சந்தனாகி விட்டாயா?"

"அது மட்டுமல்ல, நீ எங்கேயோ பக்கத்தில் மறைந்திருக்கிறீர் என்று எனக்குத் தெரியும். நான் உம்மைப் பிடித்துக் கொடுக்கிறேன் என்று தேவராளனிடம் சொல்வதை நீர் கேட்டுக் கொண்டிருந்தது உண்மை என்று நம்பி விட்டால்! இந்த ஆபத்துச் சமயத்தில் எனக்கு உதவி செய்ய வந்திருப்பீரா?"

"அப்பனே! உன் அறிவுக் கூர்மை அபாரம்! சந்தேகமில்லை. உண்மையில், தேவராளன் கேட்ட கேள்விக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் என்று கேட்க நான் மிகுந்த ஆவலாய்த்தான் இருந்தேன்!"

"பார்த்தீரா? நீர் ஒரு சந்தேகப் பிராணி என்று நான் கருதியது சரியாய்ப் போயிற்று. அதைத் தவிர, எப்பேர்ப்பட்ட நன்மை வருவதாயிருந்தாலும் வாய் வார்த்தைக்குக்கூடச் சிநேகத் துரோகமாக எதுவும் நான் சொல்லும் வழக்கமில்லை. ஆனால் நீர் 'அய்யனார் கோவிலில் காத்திருக்கிறேன்' என்று சொல்லிவிட்டு இங்கு வந்தது எப்படி? சுரங்க வழியில் நான் திரும்பி வந்திருந்தால் உம்மைக் காணாமல் திண்டாடியிருப்பேனே?" என்றான் வந்தியத்தேவன்.

"சுரங்க வழியில் நீ திரும்பி வந்திருந்தால் உயிரோடு வந்திருப்பது சந்தேகந்தான். நீ சுரங்க வழியில் புகுந்து சிறிது நேரத்துக்கெல்லாம் சதிகாரர்கள் அதில் புகுந்தார்கள். நீ புத்திசாலியாகையால் நிச்சயம் வேறு வழியாகத்தான் வருவாய், அநேகமாக இங்கே சுவர் ஏறிக் குதித்து வரக் கூடும் என்று எண்ணினேன்." "அவ்வாறு எண்ணிக் கொண்டா இவ்விடத்துக்கு வந்தீர்?"

"அது மட்டுமல்ல சுரங்கப் பாதையில் புகுந்த சதிகாரர்கள் தேவராளனை மட்டும் வெளியில் காவலுக்கு வைத்து விட்டுச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும்போது அய்யனார் கோவிலில் யாரும் இல்லாமலிருக்க வேண்டாமா? அதற்காக ஏதோ சமிக்ஞை சொல்லிவிட்டுப் புகுந்தார்கள் போலிருக்கிறது. ஆனால் அது எனக்குத் தெரியாது எல்லோரும் சுரங்கத்துக்குள் புகுந்துவிட்டார்கள் என்று நினைத்தேன். நீ உள்ளே போய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாயே என்று வேறு கவலையாயிருந்தது.

சுரங்கப்பாதையை வெளியில் இருந்து திறப்பதற்கு என்ன உபாயம் என்று தெரிந்து கொள்ளவும் விரும்பினேன். ஆகையால் பலி பீடத்தின் அருகில் சென்று அதைத் திருப்ப முயன்று கொண்டிருந்தேன். காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். தேவராளன் கையில் வேலுடன் வந்து கொண்டிருந்தான்.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## வளையல்



(நேற்றைய தொடர்ச்சி)

அவர்கள் இரவானதும் பலரது வீட்டில் கன்னம் வைத்து எது கிடைத்தாலும் சுருட்டி கொள்வர். அவர்கள் ஒரு முறை ஒரு வீட்டில் கன்னம் வைத்து உள்ளே போய் அங்கிருந்த ஒரு பித்தளை சொம்பை தூக்கி வந்து விட்டனர். அந்தோ பரிதாபம், அவர்கள் திருடிய இடம் ஒரு மந்திரவாதியின் வீடு. அவன் பித்தளை சொம்பை யார் எடுத்தார்கள் என்று கண்டு பிடித்து விட்டான். அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அவர்கள் வளையலாய் ஆகிவிடுவார்கள் என்று மந்திரம் போட்டு விட்டான்.

இதை அறிந்த திருடர்கள், ஐயோ வென்று அந்த மந்திரவாதியிடம் ஓடி பித்தளை சொம்பை கொடுத்து விட்டு மன்னிப்பு கேட்டார்கள். இவர்களின் கெஞ்சலை பார்த்த மந்திரவாதி சரி. நீங்கள் இரவு மட்டும் மனிதர்களாகவும், பகலில் வளையல்களாகவும் இருப்பீர்கள், வளையல்களாக உங்களை பார்த்த உடனே அதன் அழகில் மயங்கி எடுத்து கொள்ள வேண்டும் என்று யாராவது ஒளித்து வைத்தால் உங்களுக்கு முழு உருவம் கிடைத்து விடும். என்று விமோசனம் சொன்னார்.

அது போலவே வணிகனின் மனைவி ஆசைப்பட்டு அந்த வளையலை கணவனுக்கு தெரியாமல் ஒளித்து வைக்க, வளையல்கள் சாப விமோசனம் பெற்று மனிதர்களாக உரு மாறி தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினர்.

அப்படி ஓடிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு திருடன் தன் நண்பனிடம் நாம் இனிமேல் திருட்டு தொழிலை விட்டு விட்டு உழைக்க ஆரம்பிக்க வேண்டும் என்றான். அதை கேட்ட மற்றவன் ஆமாம், ஆமாம், இனி மேல் நாம் இந்த திருட்டு தொழிலை விட்டு விடலாம் என முடிவு செய்தவர்கள், சரி, பாவம் அந்த பெண், வளையல்களை ஒளித்து வைத்து விட்டு காலையில் அதை தேடிக் கொண்டிருப்பாளே? ஒருவன் கேட்க மற்றவன் கொஞ்சம் பொறு, நாம் அவன் கணவனுக்கு இதன் மூலம் ஏதாவது உதவி செய்து விடலாம் என்றான்.

வணிகனுக்கு அன்று அதிகமாக வியாபாரம் ஆகவில்லை. மன சோர்வுடன், வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தான்.. அப்பொழுது இரு திருடர்களும் அவனிடம் சென்று பேசினர். ஐயா எங்களிடம் கொஞ்சம் ஆபரணங்கள் இருக்கின்றன, அதை உங்களுக்கு கொடுக்கிறோம். இதை கொண்டு போய் இந்த ஊர் கிராம தலைவரிடம் ஒப்படைத்தால் அவர் உங்களுக்கு பொன்னும் பொருளும் அளிப்பார். என்றான். வணிகனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதை நீங்கள் செய்யலாமே? என்னிடம் ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டான்.

அவர்கள் நடந்த கதையை சொன்னார்கள். வணிகனின் மனைவி மூலம்தான் தாங்கள் சாப விமோசனம் பெற்றதும், இனி மேல் திருட்டு தொழிலை செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளோம். இது எல்லாம் கிராம தலைவர் வீட்டில் கொள்ளை அடித்தது. இதை கொண்டு போய் ஒப்படைத்து பரிசுகளை பெற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் இதை கண்டு பிடித்து கொண்டு வந்து தருபவர்களுக்கு பரிசு வழங்குவார்கள் என்று அறிவித்து உள்ளார்கள். அதனால் தைரியமாக எனக்கு புதரில் கிடந்தது என்று சொல்லுங்கள்.

வணிகன் மகிழ்ச்சியாக அதை பெற்றுக்கொண்டு கிராம தலைவரை பார்க்க சென்றான்.

வீட்டுக்கு வந்த பொழுது வணிகனின் மனைவி இவனை பயத்துடன் வரவேற்றாள். அவளுக்கு அந்த வளையல்கள், காணாமல் போனது ஒரு புறம், தன் கணவன் அதை எங்கே என்று தேடி, அதை நம்மிடம் கேட்டால் என்ன சொல்வது? இந்த கவலைகள்தான்.

ஆனால் வணிகனோ மிக மகிழ்ச்சியாக இருந்தான். அது மட்டுமல்ல தன் மனைவியை கூப்பிட்டு அவள் கையில் ஒரு பொருளை துணியால் சுற்றி கொடுத்தான். அதை பிரித்து பார்த்தாள்.

"ஒரு ஜோடி வளையல்கள்" அச்சு அசலாக காணாமல் போன வளையல் போல் இருந்தது. கேள்விக்குறியுடன் கணவனை பார்க்க, அவன் நடந்த அனைத்தையும் சொல்லி கிடைத்த பரிசுப்பொருளில் உனக்கு பிடித்த வளையல்களையும் வாங்கி வந்தேன் என்றான்.

வணிகனின் மனைவிக்கோ மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. இருந்தாலும், தான் வளையலை மறைத்து வைத்தது தவறு என்றும், இனிமேல் அப்படி செய்ய மாட்டேன் என்றும் அவனிடம் உறுதி கூறினாள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உன்னால் அன்று ஈது ஊழ்வினை என்றே....

இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன். எனினும் கற்புடைச் செல்வி சீதையைக் கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறைப்படுத்தியதால், அவன் வாழ்வு தொலைந்தது.

ஆம், இராவணன் சீதையைக் கவர்ந்து வருவதற்காக மாயமான் வடிவில் சென்றவன் மாரீசன்.

மாரீசன் என்றதும் அவனை ஒரு வஞ்சகப் பாத்திரமாக யாரும் பார்த்து விடாதீர்கள். காரணம்; அரக்கனாகிய மாரீசன் அநீதிகள் பல இழைத்து, தப்பிப் பிழைத்து பின்னாளில் தவவாழ்வை மேற்கொண்டவன்.

அவன் தவவாழ்வு மேற்கொள்ளும் காலத்தில் இராவணன் அவனைத் தேடிவந்து சந்திக்கின்றான்.

சீதாப்பிராட்டி மேல் தனக்கு இருக்கக்கூடிய அடக்க முடியாத காதலைப் பற்றி கூறி; சீதையைக் கவர்ந்து செல்வதற்கு உதவுமாறு மாரீசனைக் கேட்கிறான் இராவணன்.

இராவணனின் உரையைக் கேட்ட மாரீசன் அதிர்ந்து போகிறான். என்னே! கொடுமை. இராமபிரான் அவதார புருசர். சீதாப்பிராட்டி கற்பிற்கரசி.

சீதையைக் கவர்ந்தால், அதனால் இராவணன் அழிவது திண்ணம். இந்த உண்மையை இராவணனிடம் துணிந்து நின்று எடுத்துக்கூறியவன் மாரீசன்.

இங்குதான் அவன் இராவணனைப் பார்த்து **மன்னா நீ உன் வாழ்வை முடித்தாய் மதியற்றாய். உன்னால் அன்று ஈது ஊழ்வினை என்றே உணர்கின்றேன்...**

என்கிறான்.

எனினும் அதனைக் கேட்கும் நிலையில் இராவணன் இருக்கவில்லை. நான் சொல்வதை நீ செய்யத் தவறினால் உன்னைக் கொல்லுவேன் என அதட்டுகிறான் இலங்கை வேந்தன்.

அப்போதுதான் மாரீசன் நினைக்கிறான் ஊழ்வினை வந்து ஊட்டும். அதை யாராலும் தடுக்க முடியாது. இந்த உண்மையை உணர்ந்தவனாகவே மாரீசன் மாயமானாக வடிவமெடுத்து சீதை இருக்கும் இடத்தை நோக்கிச் செல்கிறான்.

இங்குதான் இராவணன் தனக்குத் தானே பகையாகிறான். யாருடைய புத்திமதியையும் அவன் கேட்பதாக இல்லை. விதி வலியதாகிறது.

ஆம், இதுதான் நம் தமிழ் அரசியலிலும் வேலை செய்கிறது. எவ்வளவுதான் நிதானமாக இருந்தாலும் ஊழ்வினை உருத்தும் நேரம் வந்துவிட்டால், பிறகென்ன எடுக்கின்ற அத்தனை தீர்மானங்களும் தலைகீழாய்ப் போகும். தாமே தமக்குப் பகையாவர். தாமே தமக்கு எதிரியாகுவர். தாமே தமக்கு தீவினையாகுவர்.

இதுவே தமிழ் அரசியலில் நடந்து கொண்டிருக்கிறது. நாம் என்ன செய்ய முடியும். நடப்பதைப் பார்ப்பது மட்டுமே நமக்கான விதி.

## இந்திய உடன்படிக்கை தொடர்பில் என்ன வினவினாலும் கால அவகாசம் என்ற ஒற்றை பதிலை வைத்து பூசி மழுப்பும் அரசாங்கம்

### அஜித் பி.பெரேரா எம்.பி காட்டம்

இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பும் போது பதிலளிப்பதற்கு அரசாங்கம் காலவகாசம் கோருகிறது. இது வரையில் போதுமான காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தொடர்ந்து காலவகாசம் கோருவது கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர்க்கும் ஒரு செயற்பாடாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித்.பி. பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (04) நடைபெற்ற அமர்வின் போது பிரதமருடனான கேள்வி வேளையில் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எத்தனை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

ஒவ்வொரு ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்ன? இருதரப்பின் சார்பிலும் கைச்சாத்திட்டவர்கள் யாவர்? ஒவ்வொரு ஒப்பந்தத்துக்காகவும் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி எப்போது பெற்றுக்கொள்ளப்பட்டது?

அத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதா? அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்களின் பிரதிகளை சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா? அரச நிர்வாகத்தின் உண்மைத்தன்மையைப் பேண வேண்டுமாயின் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாயின் இந்தியாவுடனான ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமா என்று வினவினார்.

இதன்போது பிரதமர் சார்பில் எழுந்து பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க முன்வைக்கப்பட்டுள்ள இந்த கேள்விகளுக்கு வெகு விரைவில் பதிலளிப்பதாகக் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் எழுந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா இந்தியாவுடனான ஒப்பந்தம் 2025.04.04 மற்றும் 2025.04.05 திகதிகளில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் குறித்து அரசாங்கத்திடம் பலமுறை பாராளுமன்றத்திலும், பொது இடங்களிலும் கேள்வியெழுப்பப்பட்டது. ஆனால் இது வரையில் முறையான பதில் கிடைக்கவில்லை.

இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பும் போது பதிலளிப்பதற்கு அரசாங்கம் காலவகாசம் கோருகிறது. இது வரையில் போதுமான காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தொடர்ந்து காலவகாசம் கோருவது கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர்க்கும் ஒரு செயற்பாடாக அமையும் என்று தெரிகிறது என்று கடுந்தொனியில் அரசின் மெத்தனத்தை விமர்சித்தார். (ம-7)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டோரை படகுடன் மடக்கிப் பிடித்த மீனவர்கள்

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த மீனவர்களால் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த அறுவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு படகுகளுடன் கரைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்த சட்டவிரோத மீன்பிடி படகுகள் கடற்கரைக்கு மீனவர் களால் கொண்டுவரப்பட்ட நிலையில் கடற் தொழில் நீரியல் வளத் திணைக்களத்திக்கும் கடற்படையினருக்கும் அறிவித்திருந்த போதும் குறித்த இரண்டு தரப்பி னரும் அந்த இடத்திற்கு செல்லாத நிலையில் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் மீனவர்கள் முல்லைத்தீவு பொலிஸாருக்கு குறித்த விடயம் தொடர்பில் தெரிவித்த நிலையில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகளைத் தவிர்க்கும் முகமாக சட்ட விரோத மீன்பிடியாளர்களை பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

சிலாபம் பகுதியில் இருந்து வருகை தந்து முல்லைத்தீவில் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இரண்டு மீன்பிடிப் படகுகளும் புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த இரண்டு மீன் பிடி படகுகளும் முல்லைத்தீவை சேர்ந்த இரண்டு மீன்பிடி படகுகளுமாக ஆறு மீன்பிடி படகுகளுடன் குறித்த ஆறு மீனவர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

## வடக்கிற்கான தொடருந்து சேவையை சீர்செய்யுங்கள்

### பாராளுமன்றில் காதர் மஸ்தான் கோரிக்கை

வட பகுதிக்கான தொடருந்து சேவைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் சில கேள்வியெழுப்பினார்.

2020 ஆம் ஆண்டுடன் கொழும்பு மற்றும் காங்கேசன் துறைக்கு இடையிலான ஸ்ரீதேவி தொடருந்து சேவை இடைநிறுத்தப்பட்டதையும், 2023 ஆம் ஆண்டுடன் உத்தர தேவி தொடருந்து சேவை இடைநிறுத்தப்பட்டதையும் அமைச்சர் அறிவாரா? என வினவிய காதர் மஸ்தான், அந்த சேவைகளை மீள ஆரம்பிக்குமாறும் கோரியிருந்தார்.

அத்துடன் பெலியத்த முதல் அநுராதபுரம் வரையில் இயக்கப்படும் ரஜரட்ட ரெஜின தொடருந்து சேவையை வவுனியா வரையில் நீடிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

மேலும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் முன்னெடுக்கப்படும் கொழும்பு - காங்கேசன்துறைக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட அதிவேக தொடருந்து சேவையினை கிழமை நாட்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், யாழ்தேவி தொடருந்து சேவையை மீண்டும் கல்கிஸ்ஸை வரையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க, இந்த கேள்விகளுக்குத் திருப்தியான பதில்களை வழங்க முடியாதுள்ளதாகவும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை இதற்கு உரிய பதிலொன்றை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (ம-7)

## கட்டுநாயக்கவிலிருந்து கொழும்புக்கு 24 மணிநேர சொகுசு பஸ் சேவை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை வரை புதிய அதிவேக நெடுஞ்சாலை பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

187 A/C பேருந்துசேவை கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை வழியாக முன்னெடுக்கப்படவுள்ளது.

பயணிகளின் வசதியை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேருந்து சேவை ஏழு நாட்களும் 24 மணிநேரமும் இயங்கும் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்-2025

## உழைப்பிற்கேற்ப உயர்வு கிடைக்கும்!



கிரகநிலை - பஞ்சம ஸ்தானத்தில் சனி, ராகு - களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன் - பாக்கிய ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - இலாப ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** உழைப்புக்கு ஏற்ற உயர்ந்த இடத்தை பிடிக்க வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் துலாம் இராசியினரே! நீங்கள் அனைவரையும் சரிசமமாக கருதுபவர். இந்த மாதம் சின்ன விடயங்களுக்கு கூட உங்களுக்கு கோபம் வரலாம். எனவே கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். எதிர்பாராத பணத்தேவை உண்டாகும். அதனை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். எதிலும் இழுபறியான நிலை காணப்படும். அடுத்தவர்களால் தொல்லைகள் உண்டாகலாம் கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் குழப்பமும் வீண் அலைச்சலும் இருக்கும். வீண் பகை உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பண வரத்து எதிர்பார்த்ததை விட குறையக் கூடும். கடன் விடயங்களை தள்ளிபோடுவது நல்லது. புதிய நபர்களுக்கு பொருட்களை விற்பனை செய்யும்போது கவனம் தேவை.

குடும்பத்தில் எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை. வாழ்க்கைத் துணையின் உடல் நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் குழப்பம் உண்டாகலாம். கவனம் தேவை. பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்களை சாதகமாக செய்து முடிக்க முடியும். எதிர்பார்த்த தகவல் தாமதப்படலாம்.

கலைத்துறையினருக்கு சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும். உயர் நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம் கவனம் தேவை. வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். அரசியல்துறையினருக்கு எதிர்பார்த்த பண வரவு இருக்கும். தேவையான வசதிகள் கிடைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். பழைய சிக்கல்கள் தீர்வதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் பின்னடைவு ஏற்படாமல் இருக்க கவனமாக இருப்பது நல்லது. திடீர் குழப்பம் ஏற்படலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் தலைதூக்கச் செய்யும். எனவே சாதுரியமாக பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களைப் பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சுவாதி:** இந்த மாதம் எந்த ஒரு விவகாரத்தையும் எதிர்கொள்ளும் மன வலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். நட்சத்திராதிபதி ராகுவின் சஞ்சாரம் உடல் ஆரோக்கியம், மனதில் உற்சாகத்தை தரும்.

**விசாகம்1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும். வர வேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டுக்கிடைக்கும்.

பரிகாரம்: மாரியம்மனை வெள்ளிக்கிழமைகளில் தீபம் ஏற்றி வழிபட சகல நன்மைகளும் உண்டாகும். தடை தாமதம் நீங்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 23, 24

**அதிஷ்ட தினங்கள்:** 7, 8, 9

## காரிய வெற்றிகள் உண்டாகும்!



**கிரகநிலை** - சுக ஸ்தானத்தில் சனி, ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன், புதன் - அஷ்டம ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** கோபம் உள்ள இடத்தில் தான் குணம் இருக்கும் என்ற சொல்லுக்கு ஏற்றவாறு கோபப்பட்டாலும் அதை மனதில் கொள்ளாமல் அடுத்தவருக்கு உதவி செய்யும் விருச்சிக இராசியினரே! இந்த மாதம் பேச்சு திறமையால் காரிய வெற்றிகள் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சிறிய விடயங்களால் மனநிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்தச் செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும்.

தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கி விருத்தியடையும். பொருட்களை வெளியூருக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். கணவன்-மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து பேசுவது நல்லது.

எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம். திட்டமிட்டு செயற்படுவது நல்லது. பெண்களுக்கு பேச்சு திறமையால் காரியங்களை எளிதாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். சிறிய விடயங்கள் கூட மன நிறைவு தரும்படி நடக்கும். கலைத்துறையினருக்கு யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயற்பாட்டால் பாராட்டுக் கிடைக்கும். சிலருடன் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

அரசியல்துறையினருக்கு எல்லாவித வசதிகளும் உண்டாகும். விலகிப் போனது தானாகவே வந்து சேரும். அறிவுத்திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதைக் கழிப்பீர்கள். தொழிலில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும்.




மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடை நீங்கி முன்னேற்றம் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும்.

**அனுஷம்:** இந்த மாதம் இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உத்தியோகம் தொடர்பான பிரச்சினைகள் குறையும். தேவையான உதவி கிடைக்கும். கடன் பிரச்சினை குறையும். முன்னேறத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கேட்டை:** இந்த மாதம் மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். சந்திரன் சஞ்சாரத்தால் உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம், அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமையில் நவகிரகத்தில் செவ்வாய்க்கு தீபம் ஏற்றி வணங்க எல்லாக் காரியங்களும் வெற்றி பெறும். மனத்துணிவு உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26

**அதிஷ்ட தினங்கள்:** 10, 11

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தக்கறை...

சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா காத்தார் சின்னக்குளத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இளைஞர் குழுவொன்றுடன் மோதலில் ஈடுபட்டதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,250)

## மனித புதைகுழி...

பகுதியில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "செம்மணியில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை பல்வேறு சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

அங்கு இதுவரை தோண்டப்பட்ட புதைகுழியில் இருந்த பல்வேறு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஆனாலும் அவை தொடர்பான முழுமையான விபரங்கள் வெளிவரவில்லை. இவ்வாறான நிலையில் புதைகுழி தோண்டும் பணிகளை இடைநிறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் அங்கு எலும்பு எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம். அதேநேரத்தில் சர்வதேச மேற்பார்வையுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைய புதைகுழி தோண்டும் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (இன்று) முன்னெடுக்கப்படுகின்ற இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்" என்றுள்ளது. (ம-7,33)

## பாரிய மனித...

டும். உங்களுக்குத் தேவையென்றால் வெளிநாடுகளில் இருந்து நாங்கள் நிதியைப் பெற்றுத் தரவும் உதவலாம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணம் செம்மணியில் பாரிய மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கே எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியிலான பாரிய மனித புதைகுழிகள் என்று கூறும் தன்மையைக் கொண்டுள்ளது. இங்கே எவ்வித பாதுகாப்பும் போடப்படவில்லை. மக்கள் அங்கு சென்று எதனையும் செய்யலாம் என்பதைப்போன்றுள்ளது. அந்தப் புதைகுழி தொடர்பான நடவடிக்கைகளுக்காக போதுமான நிதி இல்லை. அங்கு அகழ்வுகளை நடத்துவதற்கும் சட்ட மருத்துவ அதிகாரி விடயங்களை செயற்படுத்துவதற்கும் நிதி போதுமாக இல்லை. ஒதுக்கப்பட்டுள்ள நிதி 20 நாட்களுக்கும் போதுமானதல்ல.

போதிய நிதி இல்லாமல் அந்த நடவடிக்கைகளை நிறுத்தப் போகின்றனர். இதனால் அந்தப் புதைகுழியை பாரிய மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த வேண்டும். அதற்காக நிதியை ஒதுக்க வேண்டும். உங்களுக்கு தேவையென்றால் வெளிநாடுகளில் இருந்து நாங்கள் நிதியை பெற்றுத் தரவும் உதவலாம்.1996 காலப்பகுதியில் அங்கே நடந்த கிருஷாந்தி கொலை வழக்கின்போது 600 பேர் அங்கிருந்து காணாமல் போனமை தெரியவந்தது. இதனால் உண்மைகளைக் கண்டறிய வேண்டும். இதற்காக நிதியை ஒதுக்குமாறு நாங்கள் கோருகின்றோம். இதனைப் பாதுகாப்பதற்காகவும், சாட்சியங்களைப் பாதுகாப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் என்றார். (ம-7)

## தமிழரசு...

வழக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு தள்ளிப்போடப்பட்டு செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நீதி மன்றத்தில் இந்த வழக்கில் எதிராளிகளில் ஒருவராக இருந்த தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அந்தப் பதவியில் இருந்து விலகிய நிலையில் காலமாகிவிட்டார்.

அவரது இடத்துக்கு மற்றொரு எதிராளியாகக் கட்சியின் தற்போதைய தலைவர் சி.வி.கே.சிவஞானத்தைப் பதிலீடு செய்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியதோடு, அடுத்த வழக்குத் தவணைக்கு அவருக்கு நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவிட்டது. (ம-7)

## செம்மணி...

சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை (04) நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது, தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செம்மணியை மனித புதைகுழியாகப் பிரகடனப்படுத்துக. புதைகுழி அகழ்வுக்கு நிதியை ஒதுக்குக என முன்வைத்த கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கஜேந்திரகுமார் எம்.பி முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், துரிதமாக விசாரணைகளும் முன்னெடுக்கப்படும்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்கின்றேன். அதனால் இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கின்றேன் என்றார். (ம-7)

## பேச்சுக்கு...

துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இந்தக் கோரிக்கையை, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் (3) இரவு 11.52 மணிக்கு சி.வி.கே.சிவஞானம் தனது தொலைபேசி வழியாக இந்த வேண்டுகோளை விடுத்ததாக, ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்தார்.

மேலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சித்தார்த்தன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சுன்னாகம் பிரதேச சபையில் தமக்கு ஆதரவளிக்குமாறு கோரியதாக டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2025.06.04
சீட்டிழுப்பு இலக்கம் 5850
D 8 3 5 4 6 1
அத சம்பத
D 5 4 6 1
சீட்டிழுப்பு இலக்கம் 0425
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1880
O 34 52 66 73 O
23125

மெகா பவர்
திகதி 04/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2198
C 24 12 45 48 50

ஜய (JAYA)
திகதி 2025.06.04
சீட்டிழுப்பு இலக்கம் 118
G 7 9 6 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4092
சீட்டிழுப்பு திகதி 04.06.2025
N 24 39 62 68
N
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.04
சீட்டிழுப்பு இலக்கம் 1159
துலாம் 29 39 42 49 துலாம்
07116 46

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.06.2025 வெற்றி வாரம் 558
T 7 5 1 0 9 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.537,524.00
62399
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2824
சீட்டிழுப்பு திகதி 2025.06.04 தினம் புதன்கிழமை
32 36 71 74 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,194,808.00
DLB

சனிதா
திகதி 04.06.2025 வெற்றி வாரம் 4985
03 21 43 69 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,116,550.40
85696
DLB

ஜயோதா (Jayoda)
திகதி 2025.06.04 வெற்றி வாரம் 2132
31 33 60 62 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,703,580.80
DLB

சீட்டிழுப்பு வாரம் 4536
சீட்டிழுப்பு திகதி 04.06.2025 தினம் புதன்கிழமை
04 21 39 46 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
162743
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 04 05 15 41 74
2000
04.06.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,070,630.00
DLB

புதன்கிழமை
வெற்றி வாரம்: 2650
சீட்டிழுப்பு திகதி: 2025.06.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60.078,056.80
ADA KOTIPATHI
14 26 54 62 Z
396752
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

யாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

64 திட்டங்களுக்காக இவ்வாறு 650 மில்லியன் டொலர் முதலீடு வந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்று (04) பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இந்த காலாண்டில் மட்டும் 650 மில்லியன் டொலர் அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் மட்டும் 483 டொலர் மில்லியன் அந்நிய நேரடி முதலீடு வந்தன. 2024 ஆம் ஆண்டில் 724 அந்நிய நேரடி முதலீடு வந்தன.

ஆனால் வருடம் முழுவதும் 93 திட்டங்கள் மட்டுமே வந்தன. இப்போது எங்களிடம் முதல் காலாண்டில் மாத்திரம் 64 திட்டங்கள் உள்ளன. 650 மில்லியன் டொலர் அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளதாகக் குறிப்பிட்டார். (ம-7)

## ஆறு மண்டையோடு...

செம்மணி - சித்துபாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

அதனை அடுத்து அகழ்வுப் பணிகள் கடந்த மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமானது.

தொடர்ந்து அகழ்வு நடைபெற்று வரும் நிலையில்,

நேற்றைய அகழ்வின் போது 6 மண்டையோட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரையான அகழ்வின்போது பத்துக்கு மேற்பட்ட மனித மண்டையோடு உள்ளிட்ட உடல் பாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் ஐந்து வரையான மண்டையோட்டுப் பாகங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு பொதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மண்டையோட்டுத் தொகுதிகள் அல்லாத எச்சங்களும் மீட்கப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் நடைபெறவுள்ளது. (ம-7,33)

## 2026 ஆம்...

படுத்த எதிர்பார்க்கிறோம் என கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை (04) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, கல்வி மறுசீரமைப்புத் திட்டங்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மிக வேகமாக மாற்றமடைந்து வரும் இந்த உலகின் காலத்தின் போக்குகளுக்கு இசைவாக கல்வி மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன்.

விடயதானங்கள் மறுசீரமைப்பானது இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளுக்கமைய 8 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறுகின்றது.

இதனை கருத்திற்கொண்டு தற்போதைய உலக போக்குக்கமைய அதனை செய்வது பொருத்தமானது. எவ்வாறாயினும் நாட்டின் சமூக பொருளாதார நிலைவரத்தைக் கருத்திற்கொண்டு பௌதீக, மனித வளங்களை அபிவிருத்தி செய்து கல்வி மறுசீரமைப்பை 10 வருடங்களுக்கு ஒருதடவை செய்வது பொருத்தமானதாக இருக்கும் என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தேவையானவாறு மறுசீரமைப்பு செய்ய வேண்டுமாயின் அதனை செய்ய வேண்டிய காலப்பகுதியை தீர்மானிக்க வேண்டும்.

இதேவேளை தற்போது மாணவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அதிக கல்வி சுமையை குறைக்கவும் மற்றும் சிறந்த கல்வி முறைமையை உருவாக்குவதற்காகவும் நவீன உலகத்துடன் இணையக்கூடியவாறு எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்காக தேவையான பின்னணிகளை ஏற்படுத்தக் கூடியவாறு சகல பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு 2026ஆம் ஆண்டில் கல்வி மறுசீரமைப்பை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

# அர்ச்சுனா - அமைச்சர் வசந்த சமரசிங்க பாராளுமன்றத்தில் வாக்குவாதம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் ஆளும் கட்சி அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு இடையில் பாராளுமன்றில் நேற்று பெரும் வாக்குவாதமொன்று இடம்பெற்றது.

அரசாங்கத்திலுள்ள அமைச்சர் ஒருவர் உரித்து ஒன்றில் அநுராதபுரத்தில் 500 இலட்சம் பெறுமதியான வீடொன்றை 50 இலட்சத்திற்கு எழுதியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குற்றஞ்சாட்டினார்.

அத்தோடு, குறித்த வீட்டிற்கு அமைச்சர் வசந்த சமரசிங்க தினமும் முகம் கழுவுவதற்கு மாத்திரம் வந்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தை பாராளுமன்றில் கூறியதற்காக தன் மீது தாக்குதல் நடத்தக்கூடும. ஆனால் தான் அதற்கு அஞ்சமாட்டேன் என்றும் அர்ச்சுனா குறிப்பிட்டார்.

பின்னர், அர்ச்சுனாவின் கருத்தைக் கேட்டு கொதித்தெழுந்த அமைச்சர் வசந்த சமரசிங்க, எதற்காக வைத்தியரானோம் என்று தெரியாத ஒரு மனிதர் வைத்தியர் ஆகியுள்ளார் என தெரிவித்ததோடு, அதனை தாங்கள் பாராளுமன்றில் நிரூபித்துக் காட்டியதாகத் தெரிவித்தார். (ம-7)

# உணவு ஒவ்வாமையால் 44 மாணவர்கள் பாதிப்பு

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மூன்று வெவ்வேறு பாடசாலைகளில் இடைவேளையின்போது குறித்த பாடசாலைகளில் அமைந்துள்ள சிற்றுண்டிசாலைகளில் உணவு வாங்கி மாணவர்கள் உட்கொண்டுள்ள நிலையில் உணவு ஒவ்வாமையினால் 44 மாணவர்கள் வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுதொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சிற்றுண்டிச் சாலைகளுக்கு ஒரு இடத்திலிருந்தே உணவுகள் விநியோகித் துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)


கணக்கீடு
A/L 2027 கண.சமன்பாடு
A/L 2026 பங்குடமை
A/L 2025/Day கண.விகிதாசாரம்
A/L Day கம்பனி
ஆரம்பம் : கற்பிக்கும் இடங்கள்
S.தவா
B.Com(Hons) Acc.spl PGDE M.A in Edu
"தொடர்ந்து யா.மா.நிலை 01 உட்பட முன்னணிப் பெறுபேறுகளின் சொந்தக்கார ஆசிரியர்"
T.P : 077 239 5858
(4467)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3118)
076 825 7716 (ஆகாஸ்)

வைத்தியம்
கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1197)

English Classes
தனி மற்றும் குழுவாகவும் அல்லது
Zoom மூலமும் Gr 1 to O/L
and For English beginners
♦Grammar
♦Spoken & School Syllabus
T.P : 077 33 14 608
(1199)

சிறுநீரகம் தேவை
O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
074 076 8566
(4449)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 14 பரப்பு காணி விற்பனைக்கு 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
♦ பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி 150m தூரத்தில்
♦ நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
♦ குடியிருப்புகள் சூழவுள்ள காணி
♦ ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
♦ பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 6 மணி வரை
தொடர்புகளுக்கு :
076 739 0413, 077 623 4204
(4468)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3119)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் பணி நிலைகளுக்குரிய பணியாளர் தேவை. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.
1. கொத்துறொட்டி தயாரிப்பவர்
2. பிறைட்றைஸ் போடுபவர்
3. றொட்டி வேலை செய்பவர்
4. சமையல் உதவியாளர்
(1198)
தொடர்புகளுக்கு : 077 649 1027


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org